# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 09 அதிர்வு 107 வைகாசி 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162



Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198





# ‘தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி’

## 78 ஆண்டுகால இனவழிப்புக்கு நீதி கோரும் படிமம் - சிட்னி









ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026

# ஈழவிடுதலைப்போருக்கு காலம் தந்த பாணர்

● இவான்

“குண்டு விழுந்தாலென்ன- வீடு
குலுங்கி இடிந்தாலென்ன.
உடல் துண்டு பறந்தாலென்ன -நாங்கள்
துடித்து மடிந்தாலென்ன..
தமிழீழத்தாகம் தணியாது -எங்கள்
தாயகம் யாருக்கும் பணியாது..”

ஒரு காலம் இந்தப் பாடலும் இதைப் பாடிய தேனிசை செல்லப்பாவின் குரலும் ஈழக்கனவின் நெருப்புப் பிழம்பாய் இருந்தன. பல்லாயிரக்கணக்கான போராளிகளின் எழுச்சிக்கும் மனவுறுதிக்கும் இந்தப் பாடல் மட்டுமல்ல, இதைப்போல இன்னும் ஏராளம் எழுச்சிப்பாடல்கள் உரமாக அமைந்தன. அது விடுதலைக்கான கனவுக்காலம். அந்தக் கனவை நனவாக்குவதற்காக உயிரையும் அர்ப்பணித்து உழைத்த காலம், போராடிய காலம். அந்தக் காலத்தின் குரலாக தேனிசை செல்லப்பாவும் இருந்தார். தேனிசை செல்லப்பாவின் குரலைக் கேட்டவர் யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. எளிமையும் உறுதியும் இயல்பும் கூடியமைந்த குரலின் தனித்த அடையாளமே செல்லப்பா.

“வானுயர்ந்த காட்டிடையே நான் இருந்து பாடுகின்றேன்

வயல் வெளிகள் மீது கேட்குமா? இது வல்லை வெளி தாண்டிப் போகுமா? ..” என்று உச்சத்தொனியில் செல்லப்பா பாடும்போது, அது எங்களுடைய தந்தையோ, மூத்த அண்ணனோ, அயலில் உள்ள யாரோ ஒருவரோ பாடுவதைப்போல மிக நெருக்கமானதாக இருக்கும். செல்லப்பாவினுடைய குரலின் சிறப்பும் வசீகரமும் பாடும் தொனியும் மிகச் சாதாரணமானதாக இருப்பதேயாகும். நம்முடைய வீட்டில் உள்ளவர்கள் பாடுவதைப்போலிருக்கும். இதுதான் அவரையும் அவருடைய பாடல்களையும் எல்லோருக்கும் பிடிக்கக் காரணம். செல்லப்பாவின் குரலுக்கேற்ற மாதிரி கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்களும் எளிமையும் யதார்த்தமுமாக இருந்தன. இந்தக் கூட்டு வெற்றியே செல்லப்பாவின் வெற்றியாக, செல்லப்பாவின் பாடல்களின் ஈர்ப்பாக இருக்கிறது.

செல்லப்பா தமிழ்நாடு - திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அருகிலுள்ள சிங்கிலிப்பட்டி என்னும் ஊரில் பிறந்தவர். பதினோராவது வயதில் தன் தந்தையை இழந்து விட்டார். அதனால் அவர்மேல் குடும்பச்சுமை ஏறியது. அந்த நாட்களில் நடிகர் எம்.ஆர்.ராதா சினிமாவிலும் நாடகத்திலும் பிரபலமாக இருந்தார். பெரியாருடைய திராவிட இயக்கத்தில் தீவிரமாகச் செயற்பட்டார். செல்லப்பாவுக்கு எம்.ஆர்.ராதாவின் மேல் பற்றிருந்தது. எம்.ஆர்.ராதா தூத்துக்குடிக்கு வருவதை அறிந்த செல்லப்பா, அவரைப்போய்ச் சந்தித்தார். அந்தச் சந்திப்பு செல்லப்பாவின் வாழ்க்கையில் திருப்பமாக அமைந்தது. செல்லப்பாவைப் பாடச்சொல்லிக் கேட்ட ராதா, திருச்சி சங்கிலியாண்டபுரத்திலுள்ள தன் வீட்டுக்கு வந்து சந்திக்கச் சொன்னார், அதேபோல் திருச்சி சென்ற செல்லப்பாவைத் தன் குழுவில் சேர்த்துக்கொண்டார். சில நாள்களுக்குப் பிறகு சென்னை வால்டாக்ஸ் ரோட்டிலுள்ள ஒற்றைவாடைத் தியேட்டரில் தன் குழுவைக்கொண்டுவந்து தங்கவைத்தார் ராதா. அவரது நாடகத்தில் பாடிக்கொண்டும், சிறுசிறுவேடத்தில் நடித்துக்கொண்டும், ராதாவின் குழுவிலேயே இருந்தார் செல்லப்பா.

இந்தச் சூழலில் அப்போதைய 'நாம் தமிழர் கட்சியின்' தலைவர் சி.பா.ஆதித்தனாரோடு சேர்ந்து மன்னார்குடியில் பட எரிப்புப் போராட்டத்திற்கு பெரியார் ஏற்பாடு செய்திருந்தார். இந்திய தேசப்படத்தை எரிப்பதுதான் போராட்டம். போராட்ட மேடையில் எம்.ஆர்.ராதாவின் நாடகமும் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போராட்ட மேடையில் பாட்டுக்கச்சேரி ஒன்றை நடத்த ஆதித்தனார் விரும்பினார். அதற்குப் பாடகர்கள் யாரும் வராதநிலையில் செல்லப்பா மேடையேற்றப்பட்டார். அவரது பாடல் ஆதித்தனாருக்குப் பிடித்தது. செல்லப்பாவை நாம் தமிழர் கட்சியின் முழுநேரப்பாடகராக நியமித்தார் ஆதித்தனார். அப்படியே கட்சி அலுவலகத்திலேயே தங்கவைத்தார், அங்கிருந்தபடியே நாம் தமிழர் கட்சி மேடைகளிலும், திராவிடர் கழக மேடைகளிலும் பாடிக் கொண்டிருந்தார் செல்லப்பா.





அந்த நேரத்தில்தான் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து ஐந்து லட்சம் மலையகத்தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். அதற்காக ஏ.எல்.நாராயணனை வைத்து ஒரு பாடலை எழுதி செல்லப்பாவைப் பாட வைத்தார் ஆதித்தனார்:

“செந்தமிழா மனம் பொங்குதடா.. சிங்களர் கொடுமை மிஞ்சுதடா
இதை நேரு பண்டிதரும் பார்க்கவில்லை
சொந்த ஊரு மந்திரியும் கேட்கவில்லை..
யாரும் துணைக்கிங்கே வரவில்லை
ஆறுதல் வார்த்தைகள் தரவில்லை
செந்தமிழா மனம் பொங்குதடா சிங்களர் கொடுமை மிஞ்சுதடா”

இதனை மேடைதோறும் உணர்ச்சி மேலிடப் பாடினார் செல்லப்பா. அன்று இந்தப் பாடல் பல்லாயிரக்கணக் கானோரை உணர்ச்சிவயப்படுத்தியது.

தொடர்ந்து திராவிட இயக்க மேடைகளில் பாடிக்கொண்டிருந்த செல்லப்பாவின் குரலும் பாவமும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பேபி சுப்பிரமணியம் என்ற இளங்குமரனுக்குப் பிடித்தது. அப்பொழுது விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் முகாமிட்டிருந்தனர். இளங்குமரன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு செல்லப்பாவை ஒருநாள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் அழைத்துச் சென்றார். அந்தச் சந்திப்பு மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்காவில் நிகழ்ந்தது. ஏற்கனவே செல்லப்பாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த பிரபாகரன், செல்லப்பாவிடம் ஈழ விடுதலைப் பாடல்களைப் பாடித்தரும்படி கேட்டார். அதற்கு ஒப்புக்கொண்ட செல்லப்பா ராமச்சந்திர ஆதித்தனின் உதவியை நாடினார். பாடல்கள் ஒலிப்பதிவு செய்வதற்கான செலவை ராமச்சந்திர ஆதித்தன் ஏற்றுக் கொண்டார்.

எல்டாம்ஸ் சாலையிலிருந்த கிறித்துவ கலைத்தொடர்பு நிலையத்தில் பாடல்கள் பதிவு செய்யப்பட்டன. காசி ஆனந்தன் பாடல்களை எழுதினார். பாடல்களைக் கேட்ட அக்கலைத்தொடர்பு நிலையத்தின் நிர்வாகி ஒலிப்பதிவுக்கூடத்திற்கான வாடகையை வாங்க மறுத்துவிட்டார். ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்கள் பிரதியெடுக்கப்பட்டு ஈழத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.. அங்கு இயக்கப்போராளிகளிடமும், பொதுமக்களிடமும் அவை பெரும் வரவேற்பைப் பெற்றன.

“வாருங்கள் புலிகளே தமிழீழம் காப்போம்
வாழ்வா சாவா ஒருகை பார்ப்போம்
முந்தை எங்கள் தந்தை வாழ்ந்த முற்றமல்லவா
முடிசுமந்து நாங்கள் ஆண்ட கொற்றமல்லவா
இந்த மண்ணின் மக்கள் எங்கள் சுற்றமல்லவா
தமிழீழ மண்ணை மறந்து வாழ்தல் குற்றமல்லவா”

இப்படி ஒரு பாட்டு என்றால், அடுத்த பாடல்...
அழகான அந்தப் பனைமரம் அடிக்கடி நினைவில் வரும்...
தமிழீழ மண்ணே உன்னை மறப்பேனா நீ என் அன்னை

அடுத்த பாடல்...
நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
நாட்டின் அடிமைவிலங்கு தெறிக்கும்...
இன்னொன்று...

“பொறிகக்கும் விழியோடு புறப்பட்டுவிட்டோம் போராட நாள் குறித்தோம், எரிகுண்டு பாய்ந்தாலும் இரு கை கொண்டேற்போம் எதற்கும் நாம் துணிந்துவிட்டோம்” என்றொலிக்கும்.

இதை மிஞ்சுவதாக

நெருப்பில் நீராடுவோம்... நாங்கள் நிமிர்ந்து போராடுவோம்...

பகைவர் நேரில் நின்று போரில் வென்று வாகை சூடுவோம்...

இப்படியே நூறு நூறு பாடல்கள்...

தொடக்கத்தில் திராவிட இயக்கப்பாடல்கள், பின்னர் ஆதித்தனாரின் தமிழ்த்தேசிய இயக்கப்பாடல்கள் என்று பாடி வந்த தேனிசை செல்லப்பா, பின்னாளில் விடுதலைப்புலிகளின் போராட்டப்பாடல்களை அதிகமாகப் பாடி, தமிழீழ எழுச்சிப்பாடகராக விளங்கினார். செல்லப்பாவின் பாடல்கள் ஈழத்தில் தெருக்கள் தோறும், வீடுகள் தோறும் இசைக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. போராட்டகாலத்தில் மாவீரர் நாள், கரும்புலிகள் நாள், தியாகி திலீபனின் நாள் போன்ற எழுச்சி நாட்களில் சிவப்பு மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசப்பறக்கும் மின்கம்பங்களில் எல்லாம் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு எழுச்சிக்கானங்கள் இசைக்கவிடப்பட்டிருக்கும். அதில் அநேக எழுச்சிப் பாடல்கள் தேனிசை செல்லப்பாவின் பாடல்களாகத்தான் இருக்கும்.

தாயக இளைஞர்களுக்கு எழுச்சியூட்டுவதிலும், அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதிலும் அவர்களது இலட்சியங்களுக்கு வலுவேற்றுவதிலும் தேனிசை செல்லப்பா தன் குரலால் அளப்பரிய பங்களிப்பினை வழங்கினார்.

தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இவர் நூற்றுக் கணககான இசை நிகழ்ச்சிகளை நடத்தினார். 1990 இல் யாழ்ப்பாணம் முற்றவெளியில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் இவரது இசை நிகழ்ச்சியை ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் வடக்கு கிழக்கு மாவட்டங்கள் தோறும் இசை நிகழ்ச்சிகளை நடத்தினார்.

“மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்பத் தடையில்லை

நாங்க மட்டும் உலகத்திலே நாடு திரும்ப முடியல்ல...“ - என்று தமிழ்நாட்டில் அகதிகளாகத் தங்கியிருப்பவர்கள் நாடு திரும்ப முடியாத அவலத்தை காசி ஆனந்தனின் வரிகளிலும்



“வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகிறேன்
வயல்வெளிகள் மீது கேட்குமா இல்லை
வல்லைவெளி தாண்டிப் போகுமா...” என்று இந்திய இராணுவ நடவடிக்கையின் போது வன்னிக் காடுகளுக்குள் கரந்துறைந்திருந்த புலிகளின் உணர்வினை புதுவை இரத்தினதுரையின் வரிகளிலும் தேனிசை செல்லப்பா பாடினார். மட்டுமல்ல, “தமிழா நீ பேசுவது தமிழா என்று தமிழை விடுத்து அரைகுறை ஆங்கில மொழியில் பேசுவோரை கிண்டலடித்துப் பாடினார். இப்படிப் பல விதமாக, பலதையும் பாடி நம் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பிடித்த தேனிசை செல்லப்பாவுக்கு தலைவர் பிரபாகரன் ஈழத்தில் வைத்து பெருமதிப்பளிப்பைச் செய்தார். அதற்கிணையாக செல்லப்பாவின் பாடல்களைக் கேட்கும் தமிழ் மக்கள் தங்கள் மனதில் அவருக்கு நீங்காத இடத்தை அளித்து மதிப்புச் செய்துள்ளனர். இவ்வாறு தமிழ் இனமான உணர்வுப் பாடல்களாலும், விடுதலை எழுச்சிப் பாடல்களாலும் தமிழர்களின் நாடி நரம்புகளில் உணர்வூட்டிய பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா தனது 85வது வயதில் சென்னையில் காலமானார். அவர் காலந் தந்த பாணர்தான்.

தோற்கடிக்கப்பட்ட கனவின் மிச்சமாய் இன்னும் இருக்கும் சில நினைவுகளில் தேனிசை செல்லப்பாவின் பாடல்களும் ஒன்றாகும்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 107 வைகாசி 2026 தொ.பே:1800 960 162

# சர்வதேச ‘சைகோ’!

“நக்குற நாய்க்கு செக்கென்ன, சிவனென்ன” என்ற பழமொழிக்கு எல்லா வகையிலும் பொருந்தக்கூடிய வகையிலேயே தன்னை தமிழ்த் தேசியவாதியென காட்டிக்கொள்ளும் அர்ச்சுனா எம்.பியின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. குறிப்பாக, ஊடக வெளிச்சத்தையும் ஒலிவாங்கிகளையும் கண்டவுடன், தான் என்ன பேசுகிறோம் என்ற சுயநினைவின்றி உளறிக்கொட்டுவதையே தனது முழுநேர அரசியலாகக் கொண்டிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா.

தான் வெளியிடும் கருத்துக்கள் சமூகத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பற்றிச் சிந்திக்காமல், எப்படியாவது எதிர்மறையான கருத்துக்களைக் கூறி, அதன் மூலம் எழும் விமர்சனப் புயலில் மலிவான விளம்பரம் தேடிக் குளிர்காய்வதே இவரது அசிங்கமான அரசியல் சித்தாந்தமாக இருந்து வருகிறது.

யாழ். மண் என்பது தியாகத்தினதும், வீரத்தினதும் அடையாளம். தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் உரிமைக்காகவும் தங்களது இன்னுயிர்களைக் கொடையாகத் தந்த மேதகு பிரபாகரன், தியாக தீபம் திலீபன் போன்ற மாமனிதர்கள் உதித்த புண்ணிய பூமி அது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க மண்ணிலிருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி, தன்னை ஒரு ‘புலி’யாகக் காட்டிக் கொள்ள முனையும் அர்ச்சுனா, உண்மையில் புலி அல்ல் அதுவொரு வெறும் ‘புழுகு பூனை’ என்பதை தமிழ் மக்கள் தற்போது மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளனர்.

இவரது சந்தர்ப்பவாத அரசியலுக்கு ஆகச்சிறந்த உதாரணம், இருமொழி ஊடகங்களிலும் இவர் கையாளும் இரட்டை வேடமாகும்.

தமிழ் ஊடகங்களில் பிரபாகரனைப் புகழ்ந்து பேசித் தமிழ் மக்களின் அனுதாபத்தைப் பெற முயலும் அதே அர்ச்சுனா, சிங்கள ஊடகங்களுக்குச் சென்றவுடன் மஹிந்த ராஜபக்சவையும் இராணுவத்தினரையும் தூக்கிப் பிடித்துப் பேசித் தன்னை ஒரு முற்போக்காளராகக் காட்ட முனைகிறார்.

இந்த இரட்டை வேடத்தைக் கண்டு ஆத்திரப்படுவதை நிறுத்திவிட்ட இலங்கை மக்கள், தற்போது வடிவேலுவின் நகைச்சுவையைப் பார்ப்பதுபோல இவரது கருத்துக்களைப் பார்த்துவிட்டுத் தமக்குள் சிரித்தபடி கடந்து செல்லும் ஒரு ‘கோமாளி’யாகவே இவரைக் கருதுகின்றனர்.

இவ்வாறானதொரு ‘அரசியல் கோமாளி’யை, தமிழகத்தின் முதன்மைத் தமிழ் தேசியக் கட்சிகளில் ஒன்றான விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (விசிக) தனது மேடையில் ஏற்றிப் பேச அனுமதித்திருப்பது உலகத் தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


விசிக தலைவர் தொல். திருமாவளவன் மீது ஈழத் தமிழர்கள் இன்றும் மாறாத பெருமதிப்பைக் கொண்டுள்ளனர். அப்படியிருக்க, வரலாற்றுப் பின்புலமோ, உண்மையான கொள்கைப் பற்றோ இல்லாத இத்தகையதொரு போலித் தமிழ்த் தேசியவாதிக்குத் திருமாவளவன் போன்றதொரு மூத்த தலைவர் எப்படித் தன் மேடையில் இடமளித்தார்? என்ற நியாயமான கேள்வி இன்று ஈழத் தமிழர்கள் மத்தியில் பலமாக எழுந்துள்ளது.

வடக்கு மக்கள், அடுத்த தேர்தலில் முழுமையாக நிராகரித்துவிடுவார்கள் என்பது அர்ச்சுனாவுக்கு நன்றாகவே தெரியும். இதன் காரணமாகவே, அவர் தற்போது நாமல் ராஜபக்சவுக்கு வால்பிடிப்பதன்மூலம் , எதிர்காலத்தில் ‘தேசிய பட்டியல்’ ஊடாகவாவது நாடாளுமன்றக் கனவைத் தக்கவைத்துக் கொள்வதற்கான நச்சு விதையை விதைத்துள்ளார்.

அத்துடன் அவரது பேராசை நின்றுவிடவில்லை. தமிழக அரசியல் சூழலில் தற்போதைய இளைஞர்கள் மத்தியில் நடிகர் விஜய் ஏற்படுத்தியுள்ள அரசியல் அலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் அவர் காய் நகர்த்துகிறார்.

“அண்ணன் விஜய், அண்ணன் விஜய்” எனப் பாசம் பொங்கப் பேசி, தன்னைத் தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) ஆளாகக் காட்டிக் கொள்வதன் மூலம், வரவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் ஈழத்து இளைஞர்களின் வாக்குகளைக் கொள்ளையிடலாம் என அவர் பகற்கனவு காண்கிறார். இவரது அண்மைக்கால தமிழக விஜயமும் இதையே உறுதிப்படுத்துகின்றது.

ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டம் என்பது பல்லாயிரக்கணக்கான உயிர்களின் தியாகத்தால் எழுதப்பட்டது. அதைப் பகடைக்காயாகப் பயன்படுத்தி, தமிழகத்திலும் இலங்கையிலும் பிழைப்புவாத அரசியல் நடத்தும் இத்தகைய போலித் தேசியவாதிகளைத் தமிழ் மக்கள் இனியும் சகித்துக் கொள்ளப் போவதில்லை. இவர்களின் முகமூடிகளைக் கிழித்தெறிந்து, இவர்களை அரசியலிலிருந்து ஓரங்கட்ட வேண்டியது விழிப்புணர்வுள்ள ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.




# ராஜபக்சக்களை விரட்டும் மே மாதம்!!

● சுழியன்

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன, மர்மமான முறையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம், இலங்கையின் அரசியல் மற்றும் நீதித்துறை வரலாற்றில் ஒரு கறைபடிந்த அத்தியாயமாக உருவெடுத்துள்ளது.

மே 08 ஆம் திகதி கொள்ளுப்பிட்டியிலுள்ள வீடொன்றில் இருந்தே அவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இது தனிநபரின் தற்கொலையென சிலர் கருதலாம். ஆனால் இதன் பின்னணியில் அரசியலின் கோர முகம் இருக்கக்கூடும் என பலரும் கருதுகின்றனர்.

பல கோடி ரூபா ஊழல் வழக்கில், பிரதான சாட்சியாக இருப்பவர் மர்மமான முறையில் மரணிப்பதென்பது என்பது பல கோணங்களில் சிந்திக்க வைக்கின்றது.

இந்த மர்ம மரணத்தின் வேர்கள், கடந்த தசாப்தத்தில் நிகழ்ந்த பாரிய நிதி மோசடிகளில் ஒன்றாகக் கருதப்படும் எயார்பஸ் ஊழலுடன் ஆழமாகப் பிணைந்திருக்கக்கூடும் என்ற கருத்தும் நிலவுகின்றது.

### நடந்தது என்ன?

2013 ஆம் ஆண்டு 14 எயார்பஸ் கொள்வனவு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை, இலங்கையின் பொருளாதார வரலாற்றில் ஒரு பாரிய முறைகேடாகப் பதிவானது.

இந்த ஊழல் விவகாரத்தின் மையப்புள்ளியாக இருந்தார் எனக் கருதப்பட்ட கபில சந்திரசேன, 2 மில்லியன் டொலரை இலஞ்சமாகப் பெற்றுள்ளார்.

இது தொடர்பில் பல வருடங்களாகவே பேசப்பட்டு வந்தது. ஆனால் மஹிந்த ஆட்சி , நல்லாட்சி மற்றும் கோத்தாபய ஆட்சியின்போது இது தொடர்பில் முறையான விசாரணை இடம்பெறவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. எனினும், தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் , விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

### பிணையிலும் மோசடி

இதன் ஓர் அங்கமாக கடந்த 2026 மார்ச் 12 ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார்.

(07ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# சாட்சி அழிப்பு: இன அழிப்பு!

## ராஜபக்சக்களை விரட்டும் மே மாதம்!!

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கபில சந்திரசேனவுக்கு கடந்த 05 ஆம் திகதி கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கி இருந்தது.

5 லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், தலா 100 லட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலுமே அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், தலா 100 லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளை வழங்குவதற்காக தலா 15 ஆயிரம் ரூபா செலுத்தப்பட்டு வாடகைக்கு இருவர் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவர் பிணை நிபந்தனைகளையும், நீதிமன்ற நம்பிக்கையையும் மீறியதால் அவரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான பிடியாணை ஒன்றையும் பிறப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு விடுத்த கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், கொழும்பு பிரதான நீதிவான் கைது உத்தரவை கடந்த 7 ஆம் திகதி பிறப்பித்திருந்தார்.

இந்நிலையிலேயே மே 08 ஆம் திகதி அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிணை பெறுவதிலும் இடம்பெற்றுள்ள இந்த மோசடி தான் இதன் பின்புலம் பற்றி மேலும் ஆழமாக சிந்திக்க வைக்கின்றது.



கூலிக்கு இருவரை பிணையாளர்களாக அமர்த்தியதாக கூறப்படும் தரகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மத்திய குற்றப் புலனாய்வு பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நீண்ட காலமாக இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பது தெரியவருகின்றது.

### சர்ச்சையைக் கிளப்பிய சத்தியக் கடதாசி

எயார்பஸ் விமானக் கொள்வனவில் இலஞ்சமாகப் பெறப்பட்ட பணத்தில் 60 மில்லியன் ரூபா, அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டதாக, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன வாக்குமூலம் வழங்கி இருந்தார்.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ள அவர், ஆணைக்குழுவிடம் அளித்த வாக்குமூலத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளதாக, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், சந்தேக நபரான கபில சந்திரசேனவின் வாக்குமூலத்தின்படி, அவர் இலஞ்சமாகப் பெற்ற பணத்தில் 60 மில்லியன் ரூபா, மஹிந்த ராஜபக்சவுக்கு மூன்று தவணைகளில் செலுத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டிருந்தது.

கபில சந்திரசேனவின் மனைவியின் பெயரில் புருணை நாட்டில் ஒரு போலி நிறுவனம் நிறுவப்பட்டு, அந்த நிறுவனத்தின் பெயரில் சிங்கப்பூரில் ஒரு வங்கிக் கணக்கு திறக்கப்பட்டிருந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

எனினும், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு, அச்சுறுத்தலின் பேரில் வாக்கு மூலம் பெற்றதாக, கபில சந்திரசேனவின் சட்டத்தரணிகள், கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சத்தியக் கடதாசியை தாக்கல் செய்தனர்.

எயர்பஸ் விமானக் கொள்வனவு பரிவர்த்தனை தொடர்பான வாக்குமூலத்தில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச மற்றும் சந்தேக நபரின் மனைவி ஆகியோரின் பெயர்களைச் சேர்க்குமாறு தான் அச்சுறுத்தப்பட்டதாக கபில சந்திரசேன குறிப்பிட்டுள்ளார்.

2026 மார்ச் 12 அன்று ஆணைக்குழுவின் விசாரணையின் போது, பணிப்பாளர் நாயகம் உட்பட ஆணைக்குழு அதிகாரிகளால் பலமுறை பதிவு அறையிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டு, அச்சுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்பட்டதாகவும் கபில சந்திரசேன குற்றம் சாட்டி இருந்தார்.

அதிகாரிகள் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் சூழலை உருவாக்கி, முக்கியமான பிரமுகர்கள் மற்றும் தனது மனைவி குறித்து, தானாக முன்வந்து வழங்காத வாக்குமூலங்களை அளிக்குமாறு தன்னைக் கட்டாயப்படுத்தியதாக அவர் சத்தியக் கடதாசி ஊடாக குறிப்பிட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச அல்லது தனது மனைவியின் செல்வாக்கு அல்லது முறையற்ற ஈடுபாடு குறித்து தனது முந்தைய வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவை அனைத்தும் கட்டாயத்தின் பேரிலேயே அளிக்கப்பட்டவை என்றும், தனது சுயவிருப்பத்தின் பேரில் அல்ல என்றும் சந்திரசேன மேலும் வலியுறுத்தி இருந்தார்.

இந்த விவகாரத்தையே மஹிந்த தரப்பு தற்போது தூக்கி பிடித்துள்ளது. தமது குடும்பத்தை சிக்க வைக்கவே இவ்வாறு அச்சுறுத்தப்பட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

### மஹிந்தவிடம் விசாரணை

சர்ச்சைக்குரிய எயர்பஸ் கொடுக்கல், வாங்கல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மே 12ஆம் திகதி வாக்கு



மூலத்தை பதிவு செய்தது.

சுமார் இண்டரை மணிநேர விசாரணையின் பின்னர் மஹிந்த ராஜபக்ச அங்கிருந்து வெளியேறினார்.

மஹிந்த ராஜபக்ச இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையாவதற்கு வந்தவேளை, அவருக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் அங்கு திரண்டிருந்தனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச அரசியல்வாதிகள் உள்ளிட்டவர்களும் வருகை தந்திருந்தனர்.

### சாட்சிகள் அழிப்பு

இலங்கை அரசியல் வரலாற்றில், குறிப்பாக ராஜ பக்சக்களின் ஆட்சிக் காலத்தில், தமக்கு எதிராகத் திரும்பும் சாட்சிகள் மற்றும் எதிர்ப்பாளர்கள் கையாளப்பட்ட விதம் தொடர்பில் இன்றளவிலும் சர்ச்சை உள்ளது.

கடத்தல், காணாமல் ஆக்கப்படுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ராஜபக்ச ஆட்சிமீது இன்றளவிலும் விரல்கள் நீட்டப்பட்டுவருகின்றன. ஆனாலும் ராஜபக்ச தரப்பு அரசியல் களத்தில் தம்மை புனிதர்களாகவே காண்பித்துவருகின்றது. எவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் “30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்தோம்.” என்ற கருத்தை சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் இன்றளவிலும் தீவிரமாக விதைத்துவருகின்றனர்.

மஹிந்த ராஜபக்ச வாக்குமூலம் வழங்கவந்த நாளில் அவரது ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோ கமகே, “மே மாதமே பிரபாகரனின் கதை முடிக்கப்பட்டது. எனவே, பிரபாகரனின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்பதற்காகவே மே மாதத்தில் மஹிந்த விசாரணைக்கு அழைத்துவரப்பட்டுள்ளார்.” எனக் குறிப்பிட்டிருந்தார். மேலும் சிலர் ’புலி டயஸ்போராக்களை திருப்திப்படுத்தவே மஹிந்த மீது விசாரணை’எனக் குறிப்பிட்டிருந்தனர்.

### “திறைசேரி மரணம்”

அதேவேளை, திறைசேரியில் இடம்பெற்ற 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் இணையவழி மோசடி தொடர்பாக, பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த நிதியமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவமும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அவுஸ்ரேலியாவுக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையில் இடம்பெற்ற இந்த மோசடிகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், நிதி அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின்,ஒரு பணிப்பாளர் மற்றும் ஒரு உதவி பணிப்பாளரும், பொதுக் கடன் முகாமைத்துவ பணியகத்தின் பணிப்பாளர் மற்றும் ஒரு மேலதிக பணிப்பாளர் நாயகமும் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

அந்த அதிகாரிகளில் ஒருவரே குளியாப்பிட்டியவில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தார். அந்த அதிகாரி உயிரை மாய்த்திருக்கலாம் என காவல்துறை சந்தேகம் வெளியிட்டுள்ளது.

சாட்சிகள் அழிப்பு முறைமை என்பது நாட்டின் சட்டத்தின் ஆட்சியைச் சீர்குலைப்பதோடு, உண்மையான குற்றவாளிகளைப் பாதுகாக்கும் ஒரு கேடயமாகச் செயல்படுகிறது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் இறுதி அத்தியாயம் 2009 இல் மே மாதமே அரங்கேறியது. உள்நாட்டில் தம்மை புனிதர்களாக காண்பித்துக்கொண்டாலும் சர்வதேசத்தில் கொலையாளிகளாக மே மாதமே ராஜபக்சக்களை காண்பிக்கின்றது.

# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.





If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# எதிர்ப்பக்கம்

### செண்பகமே செண்பகமே

இசை உலகின் முடிசூடா அரசியாகத் திகழ்ந்த ஆஷா போன்ஸ்லே அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன். இந்திய இசைத் துறைக்கு இது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. சுமார் 20 மொழிகளில் பாடியிருந் தாலும், தமிழ் ரசிகர்களின் இதயங்களில் அவர் இன்றும் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருப்பதற்கு "செண்பகமே செண்பகமே" பாடலே சாட்சி.

'எங்க ஊரு பாட்டுக்காரன்' படத்தில் இளையராஜா இசையில் உருவான அந்தப் பாடல் ஒரு சகாப்தம். ஒரு மராத்திய ரான ஆஷா, அந்தப் பாடலில் காட்டிய நுணுக்கமான உணர்ச்சிகள் அற்புதம். அவரது அந்த ஹிந்தி கலந்த தமிழ் உச்சரிப்பு, பாடலுக்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. "செண்பகமே" என்று அவர் அழைக்கும்போது இருந்த அந்த மெல்லிய குழைவும், நளினமும் ரசிகர்களைப் பித்துப்பிடிக்க வைத்தன. அந்த 'அன்னியம்' கலந்த உச்சரிப்பே அந்தப் பாட லுக்கு ஒரு தனித்துவமான அழகைத் தந்தது என்பது எனது தனிப்பட்ட கருத்து.

இளையராஜாவின் கிராமிய இசைக்கு ஆஷாவின் கம்பீர மான குரல் கொடுத்த அந்த 'டச்' தான், அந்தப் பாடலை பட்டிதொட்டியெங்கும் கொண்டு சேர்த்தது. இத்தனை ஆண்டுகால இசைப் பயணத்தில் அவர் எத்தனையோ சாதனைகள் செய்திருந்தாலும், தமிழ் மண் இவரை எப்போதும் "செண்பகமே" என்றுதான் நினைவில் வைத்திருக்கும்.

மறைந்தாலும் அவரது குரல் காற்றினில் கலந்திருக்கும். அந்த மாபெரும் கலைஞருக்கு எனது அஞ்சலிகள்.

### 'நெஞ்சு பொறுக்குதில்லையே'

தமிழக அரசியல் களத்தில் எத்தனையோ மாற்றங்களைக் கண்டிருக்கிறோம், ஆனால் இடதுசாரிகள் தமிழ்நாட்டுத் தேர்தலில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்ததாக எழும் செய்திகளை நினைக்கும்போது உண்மையிலேயே 'நெஞ்சு பொறுக்குதில்லையே'. கொள்கை உறுதிக்கும், நேர்மையான அரசியலுக்கும் இலக்கணமாகத் திகழ்ந்த ஒரு இயக்கம், இன்று திராவிடக் கட்சிகளின் பாணியிலேயே தேர்தல் வெற்றிக்காகப் பண நாயகத்தை நாடியிருப்பது மிகுந்த மனவேதனையை அளிக்கிறது.

இதுவரை நாம் பார்த்த கம்யூனிசத் தலைவர்கள் சைக்கிளில் சென்று பிரசாரம் செய்தவர்களும், மக்களின் வரிப்பணத்திற் காகத் தெருவில் இறங்கிப் போராடியவர்களும் தான். ஆனால், இன்றைய சூழலில் கூட்டணிக் கட்சிகளின் நிதியுதவி யோடு அல்லது வேறு வழிகளில் வாக்காளர்களுக்குப் பணம் விநியோகிக்கும் கலாசாரத்திற்குள் அவர்களும் இழுக்கப்பட்டிருப்பது, தமிழகத்தின் மாற்று அரசியலுக்கு விடப்பட்ட ஒரு சவாலாகும்.

அரசியலில் அறம் என்பது இடதுசாரிகளிடம் மட்டுமே எஞ்சியிருப்பதாக மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கையில் இத்தகைய செயல்கள் பெரிய ஓட்டையை ஏற்படுத்தியுள்ளன.

தேர்தலில் வெற்றி பெறப் பணம் தான் பிரதானம் என்ற நிலைக்கு இடதுசாரிகளும் தள்ளப்பட்டிருப்பது, நம் ஜனநாயகத்தின் வீழ்ச்சியைக் காட்டுகிறது.

உழைக்கும் மக்களின் பிரதிநிதிகளாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் ஒரு இயக்கம், அதே மக்களின் வாக்குகளைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்குவது என்பது அவர்களின் அடிப்படை சித்தாந்தத்திற்கே எதிரானது. தேர்தல் வெற்றி தோல்விகளைத் தாண்டி, தார்மீகப் பாதையில் இருந்து விலகிச் செல்லும் இந்தப் போக்கு, வருங்காலத் தலைமுறையினருக்குச் சொல்லும் செய்தி என்ன? காலம் காலமாகப் போற்றிப் பாதுகாத்த கொள்கைகள், வெறும் வாக்குச் சீட்டுகளுக்காகப் பலியிடப்படுவது வேதனையானது. மாற்றத்தை விரும்பும் சாமானிய மனிதனின் கடைசி நம்பிக்கையும் சிதைந்து போவதைத் தாள முடியவில்லை!

### நீண்ட காத்திருப்பும், நெடும்பயணமும்

திரைஉலகின் பிரமாண்ட வித்தகர் கிறிஸ்டோபர் நோலனின் அடுத்த படைப்பான "Odyssey" குறித்த அறிவிப்பு வந்ததிலிருந்தே உலகெங்கும் உள்ள சினிமா ரசிகர்களுக்கு ஒருவித பதற்றமும் பரவசமும் தொற்றிக்கொண்டது. அறிவியல் புனைவும், தத்துவத் தேடலும் கலந்த நோலனின் திரைமொழி என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமல்ல, அது ஒரு மாபெரும் அனுபவம். சமீபத்தில் வெளியான இதன் டீசர் (Teaser), எதிர்பார்ப்பை விண்ணளவு எகிற வைத்திருக்கிறது.

அந்த 90 வினாடி டீசரில் காட்டப்படும் காட்சிகளின் அடர்த்தியும், பின்னணி இசையின் தீவிரம் கலந்த மௌனமும் ஒரு மிரட்டலான திரைப்பயணத்திற்கு நம்மைத் தயார் செய் கின்றன. இந்தப் படத்தின் கதைச் சுருக்கம் என்று பார்த் தால், காலத்தையும் இடத்தையும் கடந்து ஒரு மனிதன் மேற்கொள்ளும் மிக நீண்ட பயணம் அல்லது மனோரீதி யான தேடல், மனித இனத்தின் இருப்பையே கேள்விக்குள் ளாக்குவதாக அமையும் என்று சொல்லப்படுகிறது. நோலனின் முந்தைய படங்களில் நாம் கண்ட 'இன்செப்ஷன்' (Inception) கனவு அடுக்குகள், 'இண்டர்ஸ்டெல்லார்' (Interstellar) விண்வெளிப் பரிமாணங்கள் மற்றும் 'ஓப்பன்ஹைமர்' (Oppenheimer) படத்தில் அவர் கையாண்ட வரலாற்றுத் துல்லியம் - இவை அனைத்தின் உச்சமாகவே இந்த "Odyssey" பார்க்கப்படுகிறது.

சமகாலத்தில் சிஜிஐ (CGI) தொழில்நுட்பத்தை விட, நிஜமான படப்பிடிப்புத் தளங்களையும் (Practical Effects), ஐமேக்ஸ் (IMAX) கமராக்களையும் அதிகம் நம்பும் நோலனின் நிபுணத்துவம் இதில் வேறு கட்டத்திற்குச் சென்றிருக்கிறது. திரையில் நாம் பார்க்கும் அந்தப் பிரமாண்டம், நம் கண்களை மட்டுமன்றி சிந்தனையையும் விரிவுபடுத்துகிறது. ஒரு காத்திர மான படைப்பை மிக நேர்த்தியான தொழில்நுட்பத்தோடு கொடுப்பதில் நோலனை மிஞ்ச இன்று எவருமில்லை.

அமெரிக்க ஹொலிவுட் சூழலின் விசேஷம் என்ன வெனில், அங்கே உலகத்தையே வியக்க வைக்கும் கற்பனை வளமும் அதற்கான பொருளாதார வசதியும் உண்டு. அத்தகைய சுதந்திரமான களம் அமைந்ததாலேயே நோலனால் இதுபோன்ற உலகளாவிய அதிர்வுகளை உருவாக்க முடிகிறது.

தமிழ் சினிமாவில் இது போன்ற ஒரு பிரமாண்டமான அறிவியல் தேடல் சார்ந்த படைப்பை, தொழில்நுட்ப சமரசங் கள் இன்றி எப்போது காணப்போகிறோம் என்ற கேள்வியில் தான் நமது படைப்பாற்றலின் அடுத்த கட்டம் ஒளிந்திருக்கிறது. தகுதி வாய்ந்த ஒரு இயக்குநரின் கைகளில் சிக்கியிருக்கும் இந்த "Odyssey", சினிமா வரலாற்றில் ஒரு புதிய மைல்கல்லாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. மகிழ்ச்சி!

### ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்

பெரும்பாலானவர்களைப் போல நான் ஒன்றும் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை கால்பந்து ரசிகர் வேஷம் போடுப வன் அல்லன். தொடர்ச்சியாக ஐரோப்பிய மற்றும் உலகளா விய கால்பந்து விளையாட்டுகளை தொடர்ந்து பார்த்து வருபவன். ஆதலால் ஓரளவுக்கு ஒவ்வொரு அணியின் பலமும், பலவீனமும் தெரியும்.

2006 ஆம் ஆண்டு உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் போது அர்ஜென்டினா அணி கோப்பையை ஜெயிக்க வேண் டும் என்று வேண்டியிருக்கிறேன். ஏனென்றால் என் மனம் கவர்ந்த Juan Román Riquelme அப்பொழுது அர்ஜென்டினா அணியின் தலைவர். (இன்றுவரை Juan Román Riquelme தவிர வேறு யாருக்கும் நான் ரசிகனல்ல.) உலகிலேயே வலிமை வாய்ந்த, நுணுக்கங்களில் சிறந்த , மற்றும் பலம் பொருந்திய அணியாகவும் அன்று இருந்தது. எல்லோராலும் அர்ஜென் டினா அணியே வெற்றி பெறும் என்று எதிர்பார்த்தனர். அவர்கள் செர்பியா அணிக்கு எதிராக 24 pass கோல் அடித்தது இன்றுவரை மிகச்சிறந்த கோலாக கருதப்படுகிறது. அந்த கோலை youtube தளத்தில் பாருங்கள். ஒரு மகத்தான சிம்பொனிக்கு இணையானது. ஆனால் விதி என்பது வேறு விதமாக விளையாடியது. உலக கோப்பை அரையிறுதியில் பெனால்டி shootoutஇல் ஜெர்மனியுடன் தோற்று வெளியேறி னர். இன்று வரை நான் நினைக்கும்போதெல்லாம் வெறுக் கும் முடிவை எடுத்தார் அப்போதைய அர்ஜென்டினா அணியின் கோச் Jose Pekerman விளையாட்டின் 72வது நிமிடத்தில் Riquelme it substitution செய்தார். அதுவரை 1-0 என்ற கணக்கில் அர்ஜென்டினா முன்னணியில் இருந்தது. அடுத்து ஒரு கோல் அடித்திருந்தால் ஜெர்மனி சமன் செய்யவே வாய்ப்பில்லாமல் எளிதாக ஜெயிக்க வேண்டிய ஆட்டமது. தேவையில்லாமல் மூன்று வீரர்களை substitue செய்து "Park the bus" எனப்படும் தடுப்பாட்ட முறையை தேர்வு செய்து அணியின் தோல்விக்கு வித்திட்டார். என்னளவில் 2006 ஆம் ஆண்டு விளையாடிய அர்ஜென்டினா அணியே மிகவும் பலம் வாய்ந்த அணி. என்ன செய்வது விதி வேறு விதமாக விளையாடியது.

இந்தத் தலைப்பிற்கு அர்ஜென்டினாவிற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கலாம். சரியே. இந்தக் கட்டுரையே எவ்வாறு பல பித்தலாட்டங்கள் செய்து இத்தாலி அணி 2006 உலக கோப்பையை வென்றது என்பது பற்றியே.

Round of 16 விளையாட்டு போட்டியில் இத்தாலி அணியானது ஆஸ்திரேலியாவை எதிர்த்து விளையாடி யது . அந்த ஆட்டத்தின் 95வது நிமிடத்தில் இத்தாலியின் Fabio Grosso டைவ் அடித்து பெனால்டி வாய்ப்பு பெற்று கோல் அடித்து 1-0 என்று அநியாயமாக வெற்றி பெற வைத்தார். இப்போது இருப்பது போல் அப்போது VAR எனப்படும் தொழில்நுட்பம் இல்லை. இல்லையென்றால் அவர்கள் வென்றிருக்க வாய்ப்பே இல்லை.



ஆனந்தன் வசந்தா
கிருஷ்ணமூர்த்தி

அதே போன்று இறுதிப் போட்டியின் போது இத்தாலியின் Marco Materazzi, பிரான்ஸ் அணி யின் தலைவரான Zinedine Zidane யிடம் மிக மோசமான வார்த்தைப் பிரயோகம் செய்து ( அவரது குடும் பத்தை ஆபாசமான முறையில் பேசினார் என்கின்றனர்) வம்பி ழுத்து அவரை தலையை முட்டச் செய்து போட்டியிலிருந்து வெளி யேறச் செய்தார். அதன் பிறகு வெறும் நடந்த பெனால்டி shootoutல் வென்று அநியாயமாக கோப்பையை வென்றனர். இன்றுவரை எனக்கு சுத்தமும் பிடிக்காத உலகக்கோப்பை இறுதிப்போட்டி 2006 பிரான்ஸ் - இத்தாலி இடையேயான போட்டியாகும்.

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் என்பது போல அவர்கள் செய்த பாவத்திற்கு தண்டனையாக 2018, 2022 உலகக்கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இத்தாலி அணி தகுதி பெறவில்லை என்பது நாம் அறிந்ததே. அதே போன்று இந்த முறையும் 2026 உலகக்கோப்பைக்கான play -off இறுதிப்போட்டியில் Bosnia and Herzegovina அணிக்கு எதிராக பெனால்டி shootout ல் 4-1 என்ற வித்தியாசத்தில் தோற்றுப்போய் வெளியேறியிருக்கின்றனர். அதுவும் இந்த முறை 48 அணிகள் விளையாடும் வாய்ப்பு கிடைத்த போதிலும் அவர்களால் தகுதி பெற முடியவில்லை.

உலகக்கோப்பை போட்டியில் விளையாடுவதற்கு அவர்கள் இன்னும் நான்கு ஆண்டுகள் காத்திருக்கவேண்டும். அதாவது 2030 உலகக்கோப்பை . பார்க்கலாம் தகுதி பெறுகிறார்களா என்று. ஏனென்றால் விதி என்பது வலியது.

### நாற்காலியை நோக்கிய நடனங்கள்

2026 தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, மே 4 முதல் மே 10 வரை தமிழகம் கண்ட அரசியல் அதிரடிகள் எந்த ஒரு த்ரில்லர் படத்திற்கும் சளைக்காதவை. விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் (தவெக) முதல் தேர்தலிலேயே கணிசமான இடங்களை வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த போதிலும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை கிடைக்காதது ஒரு பெரும் அரசியல் முட்டுக்கட்டையை உருவாக்கியது.

யாரும் எதிர்பார்க்காத வகையில் தவெக பெற்ற இந்த வெற்றி, தமிழகத்தின் இருபெரும் திராவிடக் கட்சிகளான திமுக மற்றும் அதிமுகவின் அடித்தளத்தையே ஆட்டிப் பார்த்தது. ஆனால், ஆட்சியைக் கைப்பற்றத் தேவையான அந்த 'மேஜிக் நம்பர்' இல்லாதது விஜய்க்கு ஒரு சவாலாக அமைந்தது. இந்த இக்கட்டான சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, மற்ற சிறு கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதில் பெரும் இழுபறி நீடித்தது. கடந்த ஒரு வார காலமாக தமிழக அரசியலில் அரங்கேறிய திரைமறைவு வேலைகளும், குதிரைப் பேரங்களும் ஜனநாயகத்தின் மீது படிந்த கறைகளாகவே பார்க்கப்படுகின்றன.

திமுக மற்றும் அதிமுக ஆகிய இரு கட்சிகளுமே மே 4 முதல் மே 10 வரை தவெகவை ஆட்சி அமைக்க விடாமல் தடுப்பதற்கான அனைத்து தந்திரங்களையும் கையாண்டன. குறிப்பாக, தவெகவின் வெற்றி வேட்பாளர்களைத் தங்கள் பக்கம் இழுக்க நடத்தப்பட்ட குதிரைப் பேரங்கள் முகம் சுளிக்க வைத்தன. ஆளுங்கட்சியாக இருந்த திமுக, தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி திரைமறைவில் காய் நகர்த்திய அதே வேளையில், அதிமுக தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளப் பல முனைப் போட்டிகளில் இறங்கியது. இதனால் அமைச்சரவை அமைப்பதில் தாமதம் ஏற்பட்டு, ஒருவிதமான அரசியல் ஸ்திரத்தன்மையற்ற சூழல் நிலவியது.

படித்தவர்கள், இளைஞர்கள் மற்றும் புதிய முகங்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோம். ஆனால், அவர்கள் உள்ளே நுழைந்தாலும், இந்த பழைய அரசியல் அமைப்புகள் அவர்களைச் சுதந்திரமாகச் செயல்பட விடுவதில்லை என்பதை இந்த ஒரு வார கால நிகழ்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. விஜய் போன்ற ஒரு புதிய தலைவர் சந்தித்த இந்த அரசியல் நெருக்கடிகள், தமிழக அரசியலில் வேரூன்றியிருக்கும் திராவிடக் கட்சிகளின் பிடியை உடைப்பது எவ்வளவு கடினம் என்பதை உணர்த்துகிறது.

குதிரைப் பேரங்களும், பண பலமும் ஜனநாயகத்தை எந்த அளவிற்குச் சிதைக்கும் என்பதற்கு இந்த மே மாதத்தின் முதல் வாரம் ஒரு சாட்சி. காலம் காலமாகப் போற்றப்படும் திராவிட அரசியலின் தார்மீகப் பொறுப்பு என்ன ஆனது? இறுதியில் மக்களின் தீர்ப்பு மதிக்கப்பட்டதா அல்லது அதிகார மையங்களின் பேரம் வென்றதா என்பதை வரும் நாட்கள் தெளிவுபடுத்தும். காலம் தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

# ரீல்ஸ் ராஜ்யம்

# மெய்நிகர் வீரர்கள் வென்ற கதை

“தேடிச்சோறு நிதம் தின்று,
பல சின்னஞ்சிறு கதைகள் பேசி,
மனம் வாடித் துன்பம் மிக உழன்று,
பிறர் வாடப் பல செயல்கள் செய்து,
நரை கூடிக் கிழப்பருவம் எய்தி,
கொடும் கூற்றுக்கு இரை எனப் பின் மாயும்,
வேடிக்கை மனிதர்கள் பலர்,
யாருமே எதிர்பார்க்காத வண்ணம்,
ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டிகளுக்காக,
தமிழகமெங்கும் திரண்டு,
அரசையும் நீதிமன்றத்தையும்
தடுமாறச் செய்தது எப்படியோ
அப்படித்தான் 2026 விஜய்யின் வெற்றியும்”
- எழுத்தாளர்: டி. தர்மராஜ்






ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

நான் இருக்கும் ஒரு வட்ஸப் குழுமத்தில் கடந்த சில மாதங்களாக தமிழகத் தேர்தல் தொடர்பாக ஓயாமல் சண்டை போட்டுக்கொண்டிருந்தேன். அதாவது நடிகர் விஜய் அவர்களுக்கு கணிசமான வாக்கு கிடைக்கலாம். குறைந்த பட்சம் 10 சதவிகிதம் அதாவது பெரும்பான்மையான கிறிஸ்துவர்கள் வாக்களிப்பார்கள். திமுகவிற்கு எதிரான வாக்குகள் பிரிக்கும் சாத்தியம் உள்ளதால் எடப்பாடி பழனிச்சாமி வெல்வதெற்குண்டான வாய்ப்புகள் அதிகம் இருக்கு என்றெல்லாம் வாதாடினேன். பிறகு கடந்த ஒரு மாதத்தில் அதிமுக கூட்டணியின் பிரசார உத்திகள் பல்லிளிக்கத் தொடங்கின, திமுகவின் பலம் வாய்ந்த கூட்டணியெல்லாம் பார்த்த பிறகு ஏறக்குறைய அதிமுக வெல்வதற்கு வாய்ப்பே இல்லை என்று முடிவு செய்து விட்டேன். என்ன திமுக கூட்டணி எவ்வளவு இடங்கள் கிடைக்கும் என்பதை வைத்து சண்டை போட்டுக்கொண்டிருந்தோம். தவெகவிற்கு அதிகபட்சமாக 10 இடங்கள் கிடைக்கலாம். இல்லையென்றால் விஜய் திருச்சி கிழக்கில் வெல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று மட்டுமே பேசிக்கொண்டிருந்தோம்.

ஆனால் ஒரு முக்கியமான விஷயத்தினைக் கவனிக்காமல் மறந்தேபோனோம். அதாவது Virtual warriors (மெய்நிகர் வீரர்கள்) எனப்படும் சமூக ஊடகங்களில் வழியே நடத்தப்படும் தொடர்ச்சியான பரப்புரைகளை நான் கவனிக்கவேயில்லை. உதாரணத்திற்கு ஒரு நிகழ்வு எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. நான் கடந்த டிசம்பர் மாதம் இந்தியாவிற்கு விடுமுறைக்கு சென்றிருந்த பொழுது எங்களுக்கு வாகன ஓட்டுநராக வந்த பையன் (25-30 வயதிருக்கலாம்). நான் அஜித் ரசிகன் என்றும் ஆனால் எனது வாக்கு தவெகவிற்கு என்று சொன்னான். அது மட்டுமில்லை எங்கள் ஊரிலுள்ள 1000திற்கு மேற்பட்டவர்கள் விசிலுக்கு தான் வாக்களிப்பார்கள் என்றான். அது மட்டுமில்லாமல் எனக்கு instagram தளம் இருக்கிறது. அதில் நான் போடும் விஜய் சார்பான காணொளிகளுக்கு மிகுந்த வரவேற்பு .எவ்வாறு நான் ஆரம்பித்த 3 மாதத்தில் 30,000+ பின்தொடர்பவர்களை (followers ) பெற முடிந்தது என்று சொன்னான். அப்பொழுதே எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

மே மாதம் வாக்கு எண்ணிக்கை நடக்க தொடங்கிய சிறிது நேரத்தில் விஜய் கட்சியின் வீச்சு என்ன என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. விஜய்யின் தமிழக வெற்றி கழகம் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தாலும், ஆட்சி அமைக்கத் தேவையான 118 இடங்களை விட சற்று குறைவாகவே (108 இடங்கள்) பெற்றுள்ளது. அதாவது மொத்தம் பதிவாகிய 4.85 கோடி வாக்குகளில் 34.92% வாக்குகளை பெற்று தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றுள்ளது. கண்டிப்பாக நாங்கள் ஜெயித்து விடுவோம் என்ற மமதையில் திளைத்த திமுகவினரோ வெறும் 24.19மூ வாக்குகளை பெற்று 59 தொகுதிகளை வென்றிருக்கின்றனர். அந்தக் கட்சியின் தலைவரும் முதல்வர் வேட்பாளருமான முக ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் அவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் திமுக உறுப்பினர் / தவெகவின் வி.எஸ் பாபுவிடம் தோற்றுப்போனார். முதலில் இருந்தே சொதப்பிய எடப்பாடி பழனிச்சாமியின் அதிமுகவினர் 21.21% வாக்குகளை பெற்று வெறும் 47 இடங்களை பெற்றனர். நிறைய தொகுதிகளை வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட சீமானின் நாதக வாக்கு சதவிகிதம் குறைந்து வெறும் 4% வாக்குகளைப் பெற்று ஒரு தொகுதி கூட ஜெயிக்க முடியவில்லை. தமிழக சட்டமன்றத்தில் உள்ள 234 தொகுதிகளில் 44 தொகுதிகள் தனித் தொகுதிகளாக (SC Reserved) உள்ளன. இந்தத் தேர்தலில் தனித் தொகுதிகளில் தமிழக வெற்றி கழகம் (TVK) மிகச்சிறந்த வெற்றியைப் பெற்றுள்ளது. சுமார் 24 தனித் தொகுதிகளில் அந்தக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. மொத்தமுள்ள 234 எம்.எல்.ஏ-க்களில், சுமார் 50 பேர் பட்டியல் சாதி மற்றும் பழங்குடியின (SC/ST) சமூகத்தைச் சேர்ந்தவர்கள். முந்தைய சபைகளை விட ஒடுக்கப்பட்டோரின் முன்னிலைப்படுதலை இந்த தேர்தல் நிகழ்த்தி இருக்கிறது .

இந்த விஜயின் விஸ்வரூப வெற்றிக்கு என்ன காரணமாக இருக்க முடியும் .வெறும் சினிமாக் கவர்ச்சி தான் காரணமா? இல்லை ‘உமாபிபிக்கள்’ (உலக மயமாக்கலுக்கு பிறந்த பிள்ளைகள்) தான் காரணமா?. இது தொடர்பாக நிறைய காணொளிகளையும் கட்டுரைகளையும் படித்த பிறகு பேராசிரியர் டி. தருமராஜ் கருத்தில் என்னால் உடன்பட முடிந்தது. அதாவது 2017 ஜல்லிக்கட்டுப் போராட்டமும் 2026-ல் விஜய்யின் தேர்தல் வெற்றியும் தமிழ்ப் பண்பாட்டில் கடந்த பத்தாண்டுகளாக நிகழ்ந்து வரும் ஆழமான மாற்றங்களின் வெளிப்பாடுகள் ஆகும். பேராசிரியர் டி. தருமராஜ் அவர்களின் கருத்துப்படி, விஜய்யின் இந்த வெற்றி என்பது வெறும் ஒரு ‘விஜய் அலை’ அல்ல, மாறாக ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் தொடங்கிய பண்பாட்டு எழுச்சியின் தொடர்ச்சியாகும். இந்த இரண்டு நிகழ்வுகளுக்கும் அடிப்படையான ஒற்றுமை ‘தலைமையின் வெற்றிடம்’ என்கிறார் . தமிழக அரசியலில் ஒரு நம்பகமான தலைமை இல்லாதபோது அல்லது மக்கள் அவநம்பிக்கை கொள்ளும்போது, மக்கள் திரள் கிளர்ந்தெழுவதை ஜல்லிக்கட்டுப் போராட்டம் வரலாற்று ரீதியாக நிரூபித்தது் அந்த வெற்றிடத்தை நிரப்ப வந்த ஒரு பண்பாட்டுக் கதாபாத்திரமாகவே விஜய் உருவெடுத்த்திருக்கிறார் . வாடிவாசலை விட்டுத் திமிறிக்கொண்டு வரும் காளையைப் போன்ற விஜய்யின் அரசியல் பிரவேசத்தை மக்கள் ‘ஏறு தழுவுதல்’ போலவே கொண்டாடினர் என்றும் சொல்லுகிறார்.

விஜய்யின் வெற்றிக்கு அவரது சினிமாக் கவர்ச்சி மட்டுமே காரணம் என்பதை விட, தமிழ்ப் பண்பாடு ஒரு தலைவனுக்குக் கற்பித்த குணநலன்கள் அவர் மீது ஏற்றப்பட்டதுதான் முக்கியமான காரணம். கரூர் நெரிசலில் 41 பேர் சாவுக்கு கூட மக்கள் விஜய் மேல் எந்த குற்றச்சாட்டும் சொல்லவில்லை. மாறாக திமுகவின் மேல் தான் பெரும் பாலானோர் குற்றம் சாட்டினர். விஜயை வீழ்த்த திமுக தனது கடைசி அஸ்திரமாக அவரது குடும்ப பிரச்சனையை (அவரது மனைவியின் விவாகரத்து வழக்கு ) வெளிப்படுத்திய பொழுதும் மக்கள் விஜய் மேல் பரிதாபம் காட்டவே செய்தனர். தொடர்ச்சியாக திமுக எனும் வில்லனால் பாதிக்கப்படும் ஒரு எளிய கதாநாயகனாகவே எண்ணி அவரை காப்பாற்றுவது நமது கடமையென அனைவரும் விசிலுக்கு வாக்களித்திருக்கின்றனர். அதாவது இரு கட்சிகளும் மாறி மாறி வாக்குகளுக்கு பணம் கொடுத்த போதிலும் அதை வாங்கிக்கொண்டு மாற்றி வாக்கினை செலுத்தி பெரிய கட்சிகளுக்கு முகத்தில் கரியினை பூசிவிட்டிருக்கின்றனர். சுருக்கமாகக் கூறினால், ஜல்லிக்கட்டுப் போராட்டம் எந்தப் பண்பாட்டு அரசியலைத் தொடங்கி வைத்ததோ, அதன் ஒரு கிளைமாக்ஸாகவே விஜயின் 2026 வெற்றி அமைகிறது.

இது தவிர அறுபது ஆண்டுகால திமுக - அதிமுக என்ற இருமுனை அரசியலால் சலிப்படைந்த மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பினர். இது ஒரு ‘அரசியல் சுனாமி’ போலப் பாய்ந்து, பாரம்பரியக் கட்சிகளின் மீதான அதிருப்தியை இந்த தேர்தலில் வெளிப்படுத்தியிருக்கிறது.

சுமார் 2.5 கோடி இளைஞர்கள் சித்தாந்தங்களை (திராவிடம், சனாதனம் போன்ற) விட தங்களுக்கான வேலைவாய்ப்பு, சிறப்பான வாழ்வாதாரம் மற்றும் நேர்மையான நிர்வாக அமைப்புகளையே விரும்பினர். இந்த ‘தலைமுறை மாற்றமே’ விஜய்யின் வெற்றிக்கு மிகப்பெரிய உந்துசக்தியாகவும் இருந்திருக்கிறது. கடந்த 30 ஆண்டுகளில் ஓட்டுக்குக் காசு கொடுக்காமல் ஒரு கட்சி ஆட்சியைப் பிடித்தது இதுவே முதல்முறை எனக் கருதப்படுகிறது. விஜய்யின் இந்தத் தூய்மையான பிம்பம் நேர்மையான அரசியலை விரும்பிய மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. பெரியார், அம்பேத்கர் மற்றும் எம்.ஜி.ஆர் போன்ற தலைவர்களின் கொள்கைகளை உள்ளடக்கி, சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு அரசியலை விஜய் முன்வைத்தார். இது குறிப்பாகத் தலித் வாக்குகள் மற்றும் விளிம்புநிலை மக்களின் ஆதரவை அவர் பக்கம் திருப்பியது. இந்த அனைவரையும் அரவணைத்து செல்லும் போக்கே அவரது வெற்றிக்கு காரணம் என்று சொல்லலாம். அவரது அரசியலை முன்பு விமர்சனம் செய்தவன். இப்பொழுது கூர்ந்து நோக்குகிறேன். இனி என்ன செய்யப் போகிறார் என்று பார்க்கவேண்டும்.

தவெக பெருவெற்றி அடைந்த போதிலும் ,ஆட்சி அமைக்க தேவையான 118 இடங்களுக்கு 11 இடங்கள் தேவைப்பட்டன. பெருத்த இழுபறிக்கு பின் காங்கிரஸ் ( 5), வலது கம்யூனிஸ்ட் (2) , இடது கம்யூனிஸ்ட்(2) , விசிக (2 ) மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் (2 ) ஆதரவினை பெற்று ஒருவழியாக முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கிறார். தேர்தல் முடிவு வெளியான மே மாதம் நான்காம் திகதியிலிருந்து மே- 9 வரை தமிழகத்தில் நடந்து அரசியல் கூத்துக்கள் மிக மோசமானவையாக இருந்தன. விஜய் முதல்வர் ஆகிவிடக்கூடாது என்பதற்காக திமுக , அதிமுக எந்த நிலைக்கும் செல்ல தயாராக இருந்திருக்கின்றன. காங்கிரஸை தொடர்ந்து கம்யூனிஸ்டுகளும் தவெகவிற்கு ஆதரவு தந்த போது காங்கிரஸை போலவே கம்யூனிஸ்ட் கட்சியையும் வம்பிழுக்க திமுக ஊடகங்கள் முயன்றன. உடனே மார்க்ஸிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி அதிமுக தலைமையிலான ஆட்சிக்கு திமுக வெளியிலிருந்து ஆதரவு தர விரும்பியதாகவும் தங்களையும் அவ்வாறு செய்யுங்கள் என்று சொன்னதாகவும் அதற்கு தாங்கள் விரும்பவில்லை என்பதால் தவெகவிற்கு ஆதரவு தந்ததாகவும் ஆங்கில ஊடகத்தின் நேர்காணலில் தெரிவித்த பிறகு வேறு வழியில்லாமல் திமுக அடக்கி வாசித்தது. அதிமுக ,திமுக ,பாமக ,தேமுதிக, விசிக, பாஜக,அமமுக உள்பட பல கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு ஆட்சியை உருவாக்கலாம் என்று எண்ணம் பலருக்கும் இருந்திருக்கிறது. இடதுசாரிகள் இதற்கு ஒத்து வராமல் விஜய் அவர்களுக்கு ஆதரவளித்ததால் வேறு வழியில்லை என்று தெரிந்த பிறகே எடப்பாடி பழனிசாமி புதிய அரசுக்கு வாழ்த்துகள் என்றார். கடைசி நாள் வரை அதாவது வெள்ளிக்கிழமை மே 8-ஆம் திகதி வரை அதிமுக / திமுக கூட்டணியாக ஆட்சி அமைக்க பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. இது எப்படி இருக்கிறது பாருங்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது. எப்படியாவது அதிகாரத்தை பிடிக்க வேண்டும். போட்ட காசை வட்டியும் முதலுமாக எடுத்துவிட வேண்டும் என்றல்லவா திட்டம்.

எது எப்படியோ இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் வெளியான முதல்வன் திரைப்படம் போல் இன்று வரை காட்சிகள் நிகழ்ந்து வருகின்றன. பதவியேற்ற பிறகு முதல்வர் விஜய் கஜானா இருப்பு பற்றி வெள்ளை அறிக்கை தரப்போகிறேன் என்றும் மக்கள் பணத்திலிருந்து ஒரு பைசா எடுக்க மாட்டேன் என்றும் . “யாரையும் தப்பு செய்யவும் விட மாட்டேன். ஜெயித்துவிட்டோம் என்றும் ஆட்டம் ஆடலாம் என்ற எண்ணம் இருந்தால் இப்பவே இந்த நிமிஷமே அழித்துவிடுங்கள். இங்கே ஒரு செண்டர்தான் (அவர்தான்!)” என்றும் பேசியிருக்கிறார். முதல்வன் படத்தில் அர்ஜூன் முதலமைச்சர் ஆகிய பிறகு ரகுவரன் அவருக்கு ஓயாமல் தொல்லை கொடுப்பார். இங்கே ஒரு ரகுவரன் இல்லை ,இரண்டு வில்லன்கள் இருக்கின்றனர் ( உதயநிதி , எடப்பாடி பழனிச்சாமி ). இவர்களை சமாளிக்க வேண்டும். அது மட்டுமின்றி அவருக்கு ஆதரவளித்து கொண்டிருக்கும் இடதுசாரி, விடுதலை சிறுத்தைகளை சமாளிக்க வேண்டும். அவரது திரையில் எத்தனையோ வில்லன்களை அடித்து நொறுக்கியிருக்கிறார். இங்கே திரை இல்லை. ஆனால் நிறைய வில்லன்கள் உண்டு.







# — எழுகை-50 —

# தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றதன் ஐம்பதாம் ஆண்டு நிறைவு

● மறவன்

தமிழீழ மக்கள் மீது தொடர்ந்து வந்த அவலவாழ்வை போக்குவதற்காக கட்டமைக்கப்பட்ட ரீதியில் - சுதந்திர விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் ஆரம்பித்து 50 வது ஆண்டின் நிறைவை அண்மையில் மே-5 2026 இல் தமிழினம் நினைவுகூர்ந்தது.

உலகப்பந்தில் - இலங்கைத்தீவில் - தமிழர்கள் பாரம் பரியமாக வாழ்ந்துவந்த நிலையில் - தமிழர்களின் இருப்பை அழிக்கும் நோக்கோடு - தொடர்ச்சியாக அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

அடக்குமுறைகளை எதிர்த்து, புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரில் 1972 ஆம் ஆண்டில் தமிழ் உணர்வோடு இணைந்த சில இளைஞர்களோடு தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் தனித்துவமான தலைமைத்துவத்துடன் ஆரம்பித்த எமது விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சுதந்திர விடுதலை இயக்கமாக 05.05.1976 இல் பெயர் மாற்றம் பெற்றது. இந்நிகழ்வை வெறும் பெயர்மாற்றமாக வரலாற்றில் கடந்து போய்விட முடியாது. உண்மையில் ஒரு யுகப்புரட்சி பிறப்பெடுத்தநாள் இது.

புதிய தமிழ்ப்புலிகளாகச் செயற்படத் தொடங்கிய காலமென்பது, சிங்கள அடக்குமுறைக்கதிரான கொந்தளிப் பின் விளைவே. எதிர்கொண்ட அவலத்துக்கு எதிர்வினையாற் றும் துடிப்போடு ஒத்த கருத்துள்ள இளைஞர்கள் இணைந்து முன்னெடுத்த ஓர் எதிர்வினை முயற்சியாகவே புதிய தமிழ்ப்புலிகள் உருவாக்கம் பெற்றது.

ஆனால் காலவோட்டத்தில், தமிழீழம் என்ற தனிநாட்டை அடைவதை இலட்சியமாக வரித்துக்கொண்டு, அதற்குரிய செல்நெறியை வடிவமைத்து, இயக்க ஒழுங்குவிதிகள், நடைமுறைகள், கட்டுப்பாடுகள் என ஓர் இயக்கத்துக்குரிய வரைவிலக்கணத்தோடு இயங்கத் தொடங்கிய நாள்தான் இந்த மே 05 ,1976. ஆக உலகத்தால் அறியப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு, அதன் தலைமையின் முழுமை யான எண்ணவோட்டத்தோடு ஓர் கட்டுக்கோப்பான இயக்கமான உருவெடுத்தது இந்தப் பெயர்மாற்றத்தோடுதான் என்பதை வரலாற்றுப்பார்வையில் பதிவது முக்கியமானது.

எமது விடுதலை இயக்கம் - கட்டுக்கோப்புக்கும் தியா கத்திற்கும் இலட்சிய உறுதிக்கும் உதாரணம் காட்டக்கூடிய விடுதலை இயக்கமாக வரலாற்றில் நிலைத்து நிற்கின்றது என்றால் அன்றிட்ட அடித்தளம்தான் முக்கியமான காரணம்.

**இந்தப் பொன்விழாவைத் தமிழர்கள் கொண்டாட வேண்டிய தேவை என்ன?**

உலகெங்கிலும் தமிழர்கள் மாவீரர் நாளை உணர்வுபூர்வ மாக நினைவுகொள்கிறார்கள். ஏனைய தேசிய நிகழ்வுகளும் நடக்கின்றன. தேசியத்தலைவர் மீது உயிரையே தமிழினம் வைத்திருக்கிறது. இவற்றுக்குள்ளால் தமிழீழத் தாயகம் நோக்கிய தங்கள் அவாவை அணையாத்தீபமாக மக்கள் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.




இவையெல்லாவற்றுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்புத்தான் ஒரு மாயமான மையப்புள்ளியாகச் சுழன்று கொண்டிருக்கிறது. இந்த அமைப்பின் ஊடாக இப்போராட்டத்தை முன்னெடுத்துத்தான் அவர் எமக்குத் தேசியத் தலைவரானார். இவ்வமைப்பில் இணைந்து போராடி அல்லது இந்த அமைப்பின் வழிநடத்தலில் களச்சாவடைந்துதான் அவர்கள் மாவீரர் ஆனார்கள். அல்லது இந்த அமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுத்தான் மாவீரர் என மக்களால் நினைவுகொள்ளப்படுகிறார்கள். ஆக தமிழ்த்தேசிய நினைவேந்தல் நிகழ்வுகள் அமைத்துக்குமான மூலக்கட்டுமானம் இந்த இயக்கம் தான். தமிழ்த்தேசியப் பயணத்தில் இவ்வியக்கத்தின் வகிபாகத்தைத் தவிர்த்து வரலாறு பதிவாகி விடமுடியாது.

இவ்வகையான மூலப்புள்ளியான அமைப்பின் ஐம்பதா வது ஆண்டை தமிழ்மக்கள் சிறப்பாக நினைவுகொள்ளாமல் கடந்துவிட முடியாது.

தமிழ்மக்களுக்கும் புலிகள் அமைப்புக்குமான பந்தம் முள்ளிவாய்க்கால் அழிவுவரை கேள்விக்கு அப்பாற்பட்டது. தங்கள் வாழ்வின் ஒவ்வோர் அங்கத்திலும் இயக்கத்தைப் பிணைத்திருந்தார்கள் மக்கள். இதுகுறித்த ஐயம் உலகிற்கு இருக்க வாய்ப்பில்லை. ஆனால் அப்பிணைப்பின் தொடர்ச்சி யைப் பறைசாற்றும் அடையாளங்கள், குறியீடுகளைத் துலாம்பரமாக உலகிற்குச் சொல்லவேண்டிய சந்தர்ப்பங்கள் மிகச்சிலவே.

அவ்வாறான ஒரு முக்கியமான வாய்ப்பு இந்த பொன் விழா. உலகம் எப்படி வேண்டிடுமானாலும் பார்க்கட்டும், "எங்களுக்கு இந்தப் புலிகள் இயக்கம்தான் தலைமை, அது எங்கள் உயிரோடு ஒன்றிவிட்ட ஓரியக்கம்" என்பதை உலகுக் குப் பறைசாற்றும் ஒரு வாய்ப்புத்தான் இந்தப் பொன்விழா. நேரடியாக இயக்கத்துக்காக எடுக்கப்படும் ஒரு விழாவை மக்கள் பெருந்திரளாகச் செய்வதென்பது உலகுக்குப் பறைசாற்றும் ஓர் அரிய அரசியல் வாய்ப்புத்தான் என்றளவில் இந்தப் பொன்விழா நிகழ்வானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

விடுதலைப் புலிகள் என்பது தனியே ஓர் ஆயுதப் போராட்ட அமைப்பன்று, மாறாக எம்மினத்தின் விடுதலைக் கான பயணத்தை நேர்த்தியாக வழிநடத்திச் சென்ற ஓர் அரச கட்டமைப்பு,

எமது இனத்தை மிகச்சிறப்பாக நிர்வகித்த ஓர் இடைக் கால அரசு,

நவீன மானுட சமூகம் கனவு காணக்கூடிய சிறப்பான அரச நிர்வாகத்தை நடாத்திக் காட்டிய ஓர் அரசகட்டமைப்பு என்ற பல பரிமாணங்களைக் கொண்டதே இந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பதை உலகுக்குப் பறைசாற்ற வேண்டிய நிகழ்வுதான் இந்தப் பொன்விழா.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பேசுபொரு ளாக்குவதென்பது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு மட்டுமல்ல உலகப்பந்தில் ஒடுக்கப்பட்ட அனைவருக்குமான ஒரு வழிகாட்டியாகவும் அமையும். எதையும் சாதிக்கலா மென்பதை நடைமுறையில் செய்துகாட்டியது இவ்வியக்கம். எவ்வாறு ஓர் இயக்கம் இயங்க வேண்டும், மக்களுக்கான நிர்வாகக் கட்டமைப்புக்களை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும். சொந்தப் பொருளாதாரத்தில், உள்ளூர் உற்பத்தியில் தங்கியிருப்பது, கடல் வணிகங்கள், வினியோகங்களை உலகவல்லரசுகள் அனைத்தையும் பகைத்துக்கொண்டும் வெற்றிகரமாக இயங்கியது என்று பல்வேறு சாதனைகளுக்கு விடுதலைப்புலிகள் இயக்கம் வழிகாட்டிதான்.

தன்னிகரில்லாத அதன் ஓர்மைக்கும் நேர்மைக்கும் என்றும் அவ்வியக்கம் கற்களில் எழுதிய சட்டகம்தான். எண்ணிலா இடர்களுக்குள்ளால் வீரியத்தோடு மீண்டெழுந்த வரலாற்றுப் புதிர்களைப் பாடமாகச் சொல்லக்கூடிய ஒரு புதையலாகவே இவ்வியக்கம் உலகவரலாற்றில் இருக்க வேண்டும். தமிழீழத் தேசியக்கொடியில் இருக்கும்-வளையத்துக்குள்ளால் பாய்ந்து வெளிவரத்துடிக்கும் புலியின் படம்- உருவகப்படுத்தும் அடக்குமுறைக்கெதிரான கோபமும் விடுதலைக்கான வேட்கையும் உருவாக்கும் உள்ளக்கிளர்ச்சிதான் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஒட்டுமொத்தக் குறியீடாக அமைய முடியும்.

அவ்வியக்கத்தின் பின்னடைவும் ஆயுத மௌனிப்பும்கூட அனைவருக்குமான பாடந்தான் என்றபோதும் தமிழ்த்தேசிய விடுதலைப் பயணத்தின் தொடர் செயற்பாட்டுக்கும், நம்பிக்கைக்கும் எடுத்துக்காட்டாக அமைவதும், வழிகாட்டி யாக இருப்பதும் இவ்வியக்கமேதான்.

**இனப்படுகொலைக்கு இலக்கான தாயக மக்களின் நினைவாக நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள கம்பர்லாண்ட் நகர சபைக்கு சொந்தமான சிவிக் பென்டிகில் சிவிக் பூங்காவில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி ஒன்று நிறுவப்பட்டது. இத்தூபி உருவான விதம் குறித்து திருமதி துர்க்கா ஓன் அவர்கள் எதிரொலிக்கு வழங்கிய நேர்காணல் இது.**

**நேர்கண்டவர்: அனலி**

# 'தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி'

## 78 ஆண்டுகால இனவழிப்புக்கு நீதி கோரும் படிமம்



**கேள்வி: இந்த நினைவுச்சின்னத்தை தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் என்றா அல்லது முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம் என்றா குறிப்பிட வேண்டும். அடுத்து வரும் கேள்விகளில் பெயரைச் சரியாக குறிப்பிடுவதற்காகவே இந்தக் கேள்வியுடன் எனது நேர்காணலைத் தொடங்குகிறேன்.**

பதில்: நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் Civic Park-இல் Peace Garden-க்குள் அமைந்துள்ள இந்தச் சின்னத்தின் சரியான பெயர் "தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம்" என்பதாகும். முள்ளிவாய்க்கால் என்பது தமிழின அழிப்புப் போரின் இறுதிக்கட்டத்தையும், இனப்படுகொலையினை நினைவுபடுத்துவதாகவும் இருக்கும் அதே வேளையில், இந்த நினைவுச் சின்னமானது ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் காலம் காலமாக தமிழர்கள் எதிர்கொண்ட துயரங்கள், அவர்கள் எதிர்நோக்கிய அழிவுகள் மற்றும் இன அழிப்பு மற்றும் மாவீரர்களின் தியாகங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் சின்னமாக இருக்கின்றது. குறிப்பாக, நினைவுப் பலகையில் பொறிக்கப்பட்டுள்ள "தமிழீழம்" என்ற சொல்லானது எமது அடையாளத்துக்குக் கிடைத்த நிரந்தர அங்கீகாரம் என்றே குறிப்பிடலாம்.

அதனாலேயே இப்படியான நினைவுச் சின்னங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. எங்கள் சமூகத்தின் மத்தியில் இருக்கும் இந்த நினைவுச்சின்னமானது இந்தப் பகுதியில் வாழும் என்னைப் போன்ற குடும்பங்களுக்குப் பெருமை தரக்கூடியதொன்றாகவே இருக்கப் போகின்றது. இச்சின்னமானது வெறும் சிலையாக மட்டுமல்லாமல், தமிழீழ மீட்புப்போரில் மரணித்தவர்களை நினைவு கூருமிடமாகவும் மூத்தோர்கள் வெளிப்படையாகத் தம் கவலைகளைக் களையுமிடமாகவும், இறந்தவர்களுக்குப் பெற்றோர் தம் மரியாதையைச் செலுத்திக் கௌரவிக்கும் இடமாகவும், எம்மை உருவாக்கிய வரலாற்றை எங்கள் இளம் தலைமுறையினர் அறியும் இடமாகவும் இருக்கப் போகின்றது.

எம் தாயக மண்ணைப் பிரிந்து, தொலைவில் வளர்ந்த எம்மைப் போன்றவர்களுக்கு, கடந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் இணைக்கும் பாலமாக இந்த நினைவுச் சின்னம் இருக்கும். இன்று நாம் பாதுகாப்புடனும் சுதந்திரத்துடனும் வாழ்ந்தாலும், எம் மக்களின் போராட்டக் கதைகள், தியாகங்கள் மற்றும் மனஉறுதி போன்றவற்றை எம்மோடு சுமந்து கொண்டுதான் இருக்கின்றோம். எம் வரலாறும், கோரிக்கைக் குரல்களும் மிக முக்கியமானவை என்பதையும், எங்கள் அடையாளமானது மரியாதையுடன் நினைவுகூரப்பட வேண்டியதொன்று என்பதையும் இந்த நினைவுச்சின்னமானது ஈழத்தமிழரின் எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துக் கூறும் என்றே நம்புகின்றோம்.

இந்த நினைவுச் சின்னமானது பரந்த ஆஸ்திரேலிய சமூகத்தினருக்கும் ஒரு செய்தியைச் சொல்வதுடன் நினைவுகூருதல், பல்சமூகத்தன்மை, மனஉறுதி ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது. ஈழத்தமிழர்கள் இடம்பெயர்வு, துயரம், இழப்பு ஆகியவற்றை எதிர்கொண்ட போதிலும், இங்கு வாழும் சமூகத்தின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பங்களித்து வருவதையும், நிலைத்து வாழ்வதையும் இந்த நிகழ்வானது எடுத்துக் காட்டுகின்றது. போரின் தாக்கங்கள், எமக்கு இழைக்கப்பட்ட அநீதி, எமது இனத்தின் அவல வாழ்கை ஆகிய பாடங்களை எதிர்கால தலைமுறையினர் என்றும் நினைவில் கொள்ள வேண்டிய அதேநேரத்தில் கருணை, நீதி, அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்

**கேள்வி: எந்த நகரசபை இந்தச்சின்னத்தை அமைப்பதற்கான அனுமதியை வழங்கியது?**

பதில்: ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள Cumberland City Council இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது.

**கேள்வி: அந்த நகரசபையை மட்டும் அணுகினீர்களா, அல்லது வேறு நகரசபைகளிடமும் விண்ணப்பித்திருந்தீர்களா?**

பதில்: இந்தப் பகுதியில் எங்கள் தமிழ் சமூகத்தினர் அதிகளவில் வாழ்வதுடன் இங்கு அதிகளவில் பேசப்படும் மொழிகளில் தமிழே இரண்டாவது இடத்தில் உள்ளது. மேலும், பெரிய அளவிலான பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு விழாக்கள் Cumberland Council பகுதியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதுடன் பல தசாப்தங்களாக எங்கள் சமூக மக்கள் கூடும் இடமாக Civic Park இருந்து வருகிறது. எனவே, அந்த பூங்காவின் நுழைவாயிலில் இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கின்றது.

**கேள்வி: இந்த நினைவுச் சின்னத்தை உருவாக்குவதற்கான நோக்கம் அல்லது உந்துதல் என்ன?**

பதில்: எமக்கான நினைவுகளைப் பாதுகாப்பது, உயிரிழந்தவர்களை கௌரவிப்பது, எதிர்கால தலைமுறைகளுக்கு எம்மைப் பற்றிய வரலாற்றை அளிப்பது என்பவற்றுடன் அஞ்சலி செய்யவும் போராட்ட வரலாற்றில் மரணித்தோரை நினைவு கூரவும் நிரந்தர





இடமொன்றை உருவாக்குவதுமே எமது நோக்கமாக இருந்தது.

**கேள்வி: இந்த நினைவுச் சின்னத்தை உருவாக்கும் முயற்சியின் பின்னணியில் ஏதேனும் அமைப்புகள் இருந்தனவா அல்லது இது தனிநபர்களின் கூட்டு முயற்சியா?**

பதில்: சுமார் ஒரு தசாப்தத்திற்கு முன், Australian Tamil Congress-இன் Aru Rajeevan மற்றும் Tamil Civic Centre-இன் கூட்டு ஆதரவுடன் நான் இந்தத் திட்டத்தை தொடங்கினேன். தற்போது Cumberland நகர மேயர் Ola Hamed அவர்களின் ஆதரவும் தலைமையும் காரணமாக இந்த நினைவுச் சின்னத்தின் உருவாக்கம் நனவாகியுள்ளது. தன்னார்வலர்கள், பல குடும்பங்கள், ஆதரவாளர்கள், தமிழ் சமூக உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து செயல்பட்ட ஒரு சமூக முயற்சிதான் இந்த திறப்பு விழாவை மறக்கமுடியாத ஒன்றாக மாற்றியிருக்கின்றது.

**கேள்வி: இந்த நினைவுச் சின்னத்தின் வடிவமைப்பும் கல்வெட்டுகளும் எவற்றைக் குறிக்கின்றன? இதில் உள்ள சின்னங்கள் எவற்றைப் பிரதிபலிக்கின்றன? அவை எப்பொருட்களால் உருவாக்கப்பட்டுள்ளன?**

பதில்: இந்த நினைவுச் சின்னமும் அதன் குறியீடுகளும் தமிழ் சமூகத்திற்குப் பண்பாட்டு ரீதியாகவும் உணர்வு ரீதியாகவும் முக்கியத்துவம் மிகுந்தவையாகக் காணப்படுகின்றன.

நினைவுச் சின்னத்தின் உச்சியில் காணப்படும் கார்த்திகைப் பூவானது, எமது மனஉறுதி, நினைவு கூரல், தியாகம் ஆகியவற்றுடன் தமிழ் அடையாளத்துடன் நெருங்கிய தொடர்புடைய சின்னமாகவும் காணப்படுகின்றது. இது தமிழீழத்தின் தேசிய மலராகவும், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தின் மாநில மலராகவும் கருதப்படுவதுடன் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு ஆழமான உணர்வுகளையும் பண்பாட்டு அர்த்தத்தையும் வழங்குவதாகவும் உள்ளது.

நினைவுப் பலகையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"தமிழீழத் தாயகத்தில் அமைதி, நீதி, சுதந்திரம் என்ற உயரிய இலட்சியங்களுக்காய் இறுதிவரை போராடி இனப்படுகொலையில் உயிரிழந்த எமதினிய உறவுகளை நெஞ்சில் நிறுத்தி நினைவு கொள்கிறோம்."

இதன் ஆங்கில வாசகம்:

"This Peace Garden memorial honours the countless Tamil lives lost in their quest for peace, justice, and freedom in the Tamil Eelam homeland.

May their sacrifice be forever remembered, and may their legacy inspire us in our collective pursuit of liberation."

இந்த வடிவமைப்பு எமது இனத்தின் இழப்பு, அவர்களின் நினைவுகள், மனஉறுதி மற்றும் நீதிக்கான அழைப்பு என்பவற்றைப் பிரதிபலிக்கிறது. இந்தக்கல்வெட்டானது எதிர்கால தலைமுறைகளுக்காக வரலாற்று உண்மையை நிலைத்து நின்று உரைக்க உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**கேள்வி: இந்த நினைவுச் சின்னத்தை உருவாக்குவதற்கு முன் பொதுமக்களின் கருத்துகளையும், அவர்களின் உணர்வுகளையும் கேட்டறிந்தீர்களா?**

பதில்: ஆம். இந்த நினைவுச் சின்னம் சமூகத்தின் கூட்டு நினைவுகளை பிரதிபலிக்க வேண்டும் என்பதற்காக சமூகத்தின் கருத்துகளும் உணர்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டன.

**கேள்வி: முள்ளிவாய்க்கால் படுகொலையானது பல இடங்களில் "முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள்" என்று நினைவுகூரப்படுகிறது. ஆனால் நீங்கள் இதை "இனப்படுகொலை நினைவுச் சின்னம்" என்று பெயரிட்டுள்ளீர்களே?**

பதில்: ஆம். ஏனெனில் நடந்தது ஒரு தனிப்பட்ட படுகொலை மட்டும் அல்ல. அது 78 ஆண்டுகளாகப் பல்வேறு இலங்கை அரசுகளால் தமிழர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட அழிவு, இடம்பெயர்வு, வன்முறை ஆகியவற்றின் வடிவத்தைப் பிரதிபலிப்பதால் அது இனப்படுகொலையாகவே கருதப்படுகிறது.

**கேள்வி: இந்த நினைவுச் சின்னத்துக்கான நிதி எவ்வாறு திரட்டப்பட்டது? எவ்வளவு செலவானது?**

பதில்: பெரும்பாலும் சமூக நன்கொடைகள் மற்றும் தன்னார்வ பங்களிப்புகளின் மூலம் நிதி திரட்டப்பட்டது. தோட்ட அமைப்பு மற்றும் பூங்கா பராமரிப்பை நகர சபையே முன்னேடுக்கும்.

**கேள்வி: இதில் உள்ள சிலைகள் மற்றும் கலையம்சப் பகுதிகள் இங்குதான் உருவாக்கப்பட்டனவா, அல்லது வேறு இடங்களில் செய்து கொண்டு வரப்பட்டனவா?**

பதில்: சில பகுதிகள் ஆஸ்திரேலிய நிறுவனங்களால் உள்ளூரிலேயே உருவாக்கப்பட்டன. சில சிறப்பம்சமான கலை மற்றும் கட்டமைப்புப் பகுதிகள் வேறு இடங்களில் தயாரிக்கப்பட்டுப் பின்னர் இங்கு வைத்து ஒன்றிணைக்கப்பட்டன. இச்சின்னத்தின் உருவாக்கத்துக்காகத் தலைமுறைகள் தாண்டி நிலைத்திருக்கக் கூடிய வலுவான பொருட்களே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

**கேள்வி: தாயகத்திலும் புலம்பெயர் தமிழ்ச்சமூகங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யார் நடத்துவது என்ற போட்டி இருப்பதாக தெரிகிறது. எதிர்காலத்தில் இங்கும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறுமா?**

பதில்: இந்த நினைவுச் சின்னம் போட்டிக்கானது அல்ல. இந்த இடத்தை மடிந்தோரை நினைவு கூரும் இடமாகவும், ஒற்றுமையை உருவாக்கும் இடமாகவும் கருதப்பட வேண்டும். எதிர்கால நினைவேந்தல்கள் மரியாதை, கண்ணியம் மற்றும் ஒற்றுமையான நினைவு கூரலை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். இது ஆஸ்திரேலியாவில் பொதுமக்களுக்கான இடத்தில் அமைக்கப்பட்ட முதல் நினைவுச் சின்னமாக இருந்தாலும், இதுபோன்ற நினைவுச் சின்னங்கள் பிற மாநிலங்களிலும் உருவாகும் என நம்புகிறோம். Cumberland Council-இன் அனுமதியுடன் நினைவேந்தல் நிகழ்ச்சிகள், சமூக கல்வி நடவடிக்கைகள் மற்றும் வேறும் பல முயற்சிகள் எதிர்காலத்தில் நடைபெறும் என நம்புகின்றோம்.

**கேள்வி: இந்த நினைவுச் சின்னத்தை பார்வையிடக் கூடிய நேரம் எது?**

பதில்: இது ஒரு பொதுப் பூங்காவில் அமைந்துள்ளமையால் பொதுமக்கள் எந்த நேரத்திலும் வந்து பார்வையிடலாம். நகரசபையால் CCTV மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சின்னத்துக்கான பராமரிப்பும் நகரசபையினாலேயே மேற்கொள்ளப்படும். இந்த நினைவுச் சின்னமானது எப்போதும் மரியாதையுடனும் பொறுப்புடனும் பொதுமக்களால் அணுகப்படக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதே எமது நோக்கம்.

**கேள்வி: இலங்கை அரசின் ஆதரவாளர்கள் அல்லது முகவர்கள் இந்த நினைவுச் சின்னத்தை சேதப்படுத்த முயன்றால், பாதுகாப்பு ஏற்பாடுகள் உள்ளனவா?**

பதில்: அத்தகைய கவலைகளை எமக்கும் இருந்தன. ஆனால் நினைவுச் சின்னத்தைப் பாதுகாக்கப் பொருத்தமான பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் நகரசபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கேள்வி: இந்தத் திட்டத்தைத் தடுக்க இலங்கை அரசின் தரப்பில் ஏதேனும் அழுத்தங்கள் அல்லது தடைகள் இருந்தனவா?**

பதில்: இலங்கை அரசின் தரப்பில் இருந்து தடைகள் ஏதுமில்லாத போதிலும் பிற தரப்புகளில் இருந்து சவால்களும் அழுத்தங்களும் இருந்தன. ஆனால் அமைதியைப் பேணி சட்டபூர்வமாகவும் ஜனநாயகக் கொள்கைகளின் ஆதரவுடனும் சமூகத்தின் உறுதியுடனும் இந்தத் திட்டமானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**கேள்வி: ஆஸ்திரேலியாவில் ஈழத்தமிழர்கள் பல மாநிலங்களில் வாழ்கின்றனர். நகரசபைகள் பொதுவாக சிறிய நிலப்பகுதிகளை மட்டுமே ஒதுக்குவதால் பெரிய நினைவுச் சின்னங்கள் அமைப்பது எப்போதும் சாத்தியமில்லை. அதே நேரத்தில் நினைவுச் சின்னங்களை அமைப்பது காலத்தின் தேவையாகவும் உள்ளது. இதற்கான தீர்வுதான் என்ன?**

பதில்: சிறிய நினைவுச் சின்னங்கள் கூட ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருக்கக் கூடும். ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள சமூகங்கள், அங்குள்ள சட்டங்களுக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ற வகையில் நினைவுகூரும் வடிவங்களை உருவாக்கலாம். அதேசமயம் ஒற்றுமையும், சின்னங்களை உருவாக்குவதன் பொதுவான நோக்கமும் மாறாமல் இருக்க வேண்டும்.

**கேள்வி: இந்த நினைவுச் சின்னத்தை உருவாக்கியவர்களில் நீங்களும் ஒருவர். இதனால் உங்கள் தாயகப் பயணத்தில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளனவா?**

பதில்: இதில் ஈடுபட்டவர்கள் வரக்கூடிய சாத்தியமான அபாயங்களைப் புரிந்துகொண்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதும் வரலாற்று உண்மையைப் பாதுகாப்பதும் புறக்கணிக்க முடியாத ஒரு நெறிப்பொறுப்பாகவே கருதப்பட வேண்டும்.



**திறப்பு விழாவில் பங்கேற்றவர்கள்:**

- Cumberland efu Nkau; Ola Hamad
- Dr Hugh McDermott MP – Parliamentary Secretary to the Attorney General, New South Wales Legislative Assembly உறுப்பினர், மற்றும் Prospect தொகுதி உறுப்பினர்
- Hon. Anthony D'Adam MLC – New South Wales Legislative Council உறுப்பினர்
- முன்னாள் செனட்டர் Lee Rhiannon
- பரந்த சமூக அமைப்புகள், தமிழ் அமைப்புகள், தமிழ் சமூக உறுப்பினர்கள் மற்றும் ஊடகங்கள்

# 'Tamil Genocide Memorial'

## A statue demanding justice for 78 years of genocide




**Question: Is it a Tamil Genocide Memorial or a Mullivaikkal Memorial? Why do I begin with this question? So that I can refer to it correctly in the questions that follow.**

Answer: The correct name is the Tamil Genocide Memorial which is situated within the Peace Garden of the Civic Park in NSW. Mullivaikkal represents the final phase and symbol of the genocide, but the memorial stands also for the broader historical suffering, ethnic cleansing and destruction faced by Eelam Tamils and our collective pursuit of liberation. It particularly mentions Tamil Eelam in it's plaque wording, giving a permanent acceptance of our identity.

That is why memorials like this are so important. Living in this area and seeing this space stand proudly within our community means so much to families like mine. It is more than a statue, it is a place of memory, healing, and truth. It gives our elders a place to grieve openly, our parents a place to honour those they lost, and our younger generation a place to learn the history that shaped us.

For many of us who grew up far away from our homeland, this memorial becomes a bridge between our past and our future. It reminds us that even though we now live in safety and freedom, we carry the stories, sacrifices, and resilience of our people with us. It tells future generations of Eelam Tamils that our history matters, that our voices matter, and that our identity deserves to be remembered with dignity.

This Memorial also stands as a message to the wider Australian community. It reflects the values of remembrance, multiculturalism, and human resilience. It shows that despite displacement, suffering, and loss, our community continues to contribute, grow, and thrive here. It ensures that the lessons of injustice, war, and survival are never forgotten, so that future generations can continue building a society grounded in compassion, justice, and peace.

**Question: In which part of the state, specifically, did the municipal council grant permission for this?**

Answer: Cumberland City Council in the State of New South Wales, Australia.

**Question: Did you approach only that particular council, or did you also apply to other municipal councils?**

Answer: Our Tamil community has a strong presence in this area with Tamil being the second most spoken language in the area, with major Pongal and Tamil New Year celebrations held across the Cumberland Council area. Civic Park, in particular, has been a gathering place for our community for decades, making it especially meaningful that this memorial was erected at the entrance to the park.

**Question: What was the reason or motivation behind creating the monument?**

Answer: The aim was to preserve memory, honour the victims, educate future generations, and create a permanent place for mourning and reflection.

**Question: Is there any organization behind the creation of this monument, or was it a collective effort by individuals?**

Answer: I initiated this project almost a decade ago with the collective support of the Tamil Civic Centre and Aru Rajeevan from the Australian Tamil Congress. Now, with the support and leadership of Mayor Ola Hamed, this memorial has become a reality. A collective community effort involving volunteers, families, supporters, and members of the Tamil community working together made the memorial unveiling event unforgettable .

**Question: What do the design and inscriptions of the memorial symbolize?**

**Question: What do the symbols in the memorial represent? What materials were used to create them?**

Answer: This memorial and its symbolism carry deep cultural meaning and profound significance for the Tamil community.

The Karthigai flower placed at the top of the memorial has been chosen as a symbol closely connected to remembrance, resilience, sacrifice, and Tamil identity. The flower is recognised as a national flower of Tamil Eelam and the Indian state of Tamil Nadu, carrying deep emotional and cultural significance for Tamils across the world.

The Memorial plaque reads:

"This Peace Garden memorial honours the countless Tamil lives lost in their quest for peace, justice, and freedom in the Tamil Eelam homeland.

May their sacrifice be forever remembered, and may their legacy inspire us in our collective pursuit of liberation.

தமிழீழத் தாயகத்தில் அமைதி, நீதி, சுதந்திரம்
என்ற உயரிய இலட்சியங்களுக்காய் ( latchiyankalukai)
இறுதிவரை போராடி இனப்படுகொலையில்
உயிரிழந்த எமதினிய உறவுகளை
நெஞ்சில் நிறுத்தி நினைவு கொள்கிறோம்."

The design represents loss, remembrance, resilience, and the continuing call for justice. The inscriptions help preserve historical truth for future generations.

**Question: Did you seek public opinion and gather people's views before creating the memorial, or…?**

# 'Tamil Genocide Memorial'

## A statue demanding justice for 78 years of genocide







Answer: Yes, community views and sentiments were taken into consideration to ensure the memorial reflected collective remembrance.

**Question: The Mullivaikkal massacre is remembered in many places as Mullivaikkal Remembrance Day. But you have named this a Genocide Memorial, haven't you?**

Answer: Yes, because what happened was not an isolated massacre alone. It reflects a broader pattern of destruction, displacement, and violence directed against Tamils over 78 years by successive Sri Lankan governments that amounts to genocide.

**Question: How did you raise funds for creating this memorial? How much money was spent?**

Answer: Funding came mainly through community donations and voluntary contributions. The council has funded the landscape and garden.

**Question: Were the sculptures and artistic elements featured in the memorial created here, or were they made elsewhere and brought here?**

Answer: Some components were created Australian company locally, while certain specialist artistic or structural elements were prepared elsewhere and later assembled at the site. Durable materials were chosen to ensure the memorial stands for generations.

**Question: Across the homeland and the diaspora, there seems to be competition over who organizes Mullivaikkal Remembrance Day. In the future, will remembrance events be held here?**

Answer: This memorial is not about competition. It is a place of remembrance and unity. Future commemorations should focus on dignity, respect, and collective remembrance. As it is the first of it's kind in Australia on public land, we hope similar memorials will be erected in other states in Australia. Remembrance events, community education and other initiatives will be held in the future with Cumberland Council's approval.

**Question: What are the visiting hours for this memorial?**

Answer: It's in a public park and the public can visit it around the clock. CCTV and security has been installed by the council and site management will be by the council also. The intention is to keep the memorial accessible to the public respectfully and responsibly so

**Question: If agents or operatives of the Sri Lankan government attempt to vandalize the memorial, are there any protection measures or security arrangements in place?**

Answer: We are aware of such concerns, and appropriate security and community protection measures undertaken by the council to safeguard the memorial.

**Question: Were there any pressures or obstacles from the Sri Lankan government aimed at preventing this project from being completed?**

Answer: Not from the Sri Lankan government, but despite challenges and pressures from other sources, the project was carried out peacefully, lawfully, and with the support of democratic principles and community determination.

**Question: Some may ask whether this memorial resembles the memorial design in Canada, wouldn't they?**

Answer: Memorials around the world may share common themes of remembrance and loss, but this memorial has its own identity shaped by the local community and context. Especially as there are laws in NSW as to the height and other requirements of memorials in public parks, we worked collabrately to adhere to this so that the memorial will stand for generations.

**Question: In Australia, Eelam Tamils are spread across many states. Since councils usually allocate only small plots of land, large memorials may not always be possible. Yet it is also impossible to avoid building memorials altogether. What solution can be found?**

Answer: Even modest memorials can carry deep meaning. Communities in each state can create forms of remembrance suited to their local laws and circumstances while maintaining shared unity and purpose.

**Question: You are one of the people involved in creating this memorial. Has your involvement caused any difficulties regarding your return to your homeland?**

Answer: Those involved understand the possible risks, but remembering the victims and preserving historical truth is seen as a moral responsibility that cannot be ignored.

**Those participating in the unveiling event are:**

Mayor Ola Hamad, Mayor of Cumberland City.

Dr Andrew Charlton MP - Cabinet Secretary, Assistant Minister for Science, Technology and the Digital Economy, and Federal Member for Parramatta.

Dr Hugh McDermott MP - Parliamentary Secretary to the Attorney General, Member of the New South Wales Legislative Assembly, and Member for Prospect.

Hon. Anthony D'Adam MLC - Member of the New South Wales Legislative Council.

Former Senator Lee Rhiannon.

And community organisations from the broader community, tamil organisations, tamil community members and media.






XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
282-284, londales st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


MS JEWELRY WORK SHOP
No:- 87, McIntyre Road, Sunshine North VIC 3020 (Inside Barber Shop)
WORKING DAYS
MON - SUN (10 AM TO 6 PM)
WEDNESDAY (CLOSED)
+61 469 033 450
காது குத்துதல், பழைய நகைகள் திருத்துதல், உடைந்த நகைகள்
ஒட்டுதல் மற்றும் புதிய நகைகள் என்பன செய்து கொடுக்கப்படும்
Ear Piercing, Old Jewelry Repair, Broken Jewelry Repair, and New Jewelry Will Be Provided

# மாத ராசிபலன்



## மேடம்

இந்த மாதம் காதல் உறவுகளில் பரஸ்பர அன்பு வலுப்பெறும். எனினும், வாழ்க்கையில் ஏதோ ஒரு வெற்றிடம் இருப்பது போன்ற உணர்வு நீடிக்கும். நிதி சார்ந்த விடயங்களில் செலவுகள் அதிகமாக இருக்கும். உடல்நலம் படிப்படியாக மேம்படும். மே மாத இறுதியில், நீங்கள் முழுமையான ஆரோக்கிய உணர்வைப் பெறுவீர்கள். வீட்டில் அனைத்தும் சீராக இருந்தாலும், அனைவரின் பேச்சையும் காதுகொடுத்துக் கேட்டுவிட்டு, உங்கள் மனதுக்குப் பிடித்ததைச் செய்யுங்கள். பணியிடத்தில் திடீரெனச் சில சிக்கல்கள் எழக்கூடும். அவற்றை நீங்கள் மிகுந்த பொறுமையுடன் கையாண்டு தீர்க்க வேண்டும்.

## கடகம்

தொழில் ரீதியில் நீங்கள் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் உடல்நிலையும் குறிப்பிடத்தக்க அளவில் மேம்படும். தியானம் மற்றும் யோகா ஆகியவை சிறந்த ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும். மே மாதத்தில் மேற்கொள்ளும் பயணங்கள் உங்களுக்கு இனிமையான அனுபவங்களைத் தருவதுடன், உங்கள் வாழ்க்கையில் கௌரவத்தையும் உயர்த்தும். காதல் உறவுகளில் நடைமுறைக்கு உகந்த முடிவுகளை எடுப்பது சிறந்தது. மே மாத இறுதியில், உங்கள் வாழ்க்கையில் ஒருவித கட்டுப்பாட்டையோ அல்லது முடக்கத்தையோ நீங்கள் உணரக்கூடும்.

## துலாம்

தொழிலில் உங்கள் திட்டத்தின் வெற்றியைக் கண்டு நீங்கள் மிகுந்த மனநிறைவு அடைவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சியும் செழிப்பும் நிலவ வாய்ப்புள்ளது. மேலும், பயணங்கள் மூலம் மிதமான வெற்றியே கிடைக்கும். எனவே, இம்மாதம் பயணம் மேற்கொள்ளாமல் இருப்பதில் எந்தத் தீங்கும் இல்லை. சுகாதாரம் தொடர்பான உடல்நலப் பிரச்சினைகள் ஏற்படலாம். மே மாதத்தின் இறுதியில், உங்கள் வாழ்க்கையின் சூழல் படிப்படியாக மேம்படும்.

## மகரம்

நிதி சார்ந்த விடயங்களில் வெற்றியை அடைவீர்கள். மேலும், உங்கள் அன்புக்குரியவர்களின் சிறந்த எதிர்காலத்திற்காகச் சில உறுதியான முடிவுகளையும் நீங்கள் எடுக்கக்கூடும். குடும்பத்திற்குள் மகிழ்ச்சியும் செழிப்பும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகி வருகின்றன. உணர்வுபூர்வமான தருணங்கள் ஏற்படலாம். காதல் உறவுகளில் சில சிக்கல்கள் ஏற்படலாம். மே மாத இறுதியில் சூழ்நிலைகள் சாதகமற்று மாறக்கூடும். எனவே, எந்தவொரு முடிவையும் நிதானத்துடனும் கட்டுப்பாட்டுடனும் எடுப்பது சிறந்தது.

## இடபம்

பணியிடத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும்.ஒரு புதிய திட்டம் உங்கள் வெற்றிக்கு வழிவகுக்கும். உங்கள் உடல் நலம் குறித்து நீங்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். நிதி சார்ந்த விடயங்களில் செலவுகள் அதிகரிக்கலாம். இக்கால கட்டத்தில் உங்களுக்குச் சாதகமற்ற அல்லது சிரமமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். காதல் உறவுகளில் மன அழுத்தம் அதிகரிக்கக்கூடும். மே மாத இறுதியில் உணர்வுபூர்வமான பதற்றங்கள் அதிகமாக இருக்கும்.

## சிம்மம்

குடும்பத்தினரிடமிருந்து உங்களுக்குப் பெருமளவு ஆதரவு கிடைக்கும். கடினமான காலங்களில் அவர்கள் உங்களுக்குத் துணையாக நிற்பார்கள். நிதி சார்ந்த விடயங்களில் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் இறுதியில் நல்ல பலன்களைத் தரும். காதல் உறவுகளில் சூழல் இயல்பாகவே இருக்கும். பணியிடத்தில் நீங்கள் நிதானத்துடன் செயல்பட வேண்டும். யோசிக்காமல் பேசும் வார்த்தைகள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். உங்கள் உடல்நிலையிலும் மிதமான முன்னேற்றம் காணப்படும்.

## விருச்சிகம்

உங்கள் நிதி நிலைமை கணிசமாக மேம்படும். வீட்டில் ஏற்படும் ஒரு புதிய தொடக்கம் உங்கள் வாழ்க்கையில் அமைதியைக் கொண்டுவரும். பயணங்கள் இனிமையான பலன்களைத் தரும். ஒரு பெரியவரின் உதவியால் உங்கள் பயணம் வெற்றிகரமாக அமையும். உங்கள் உடல்நிலையும் கணிசமாக மேம்படும்.

பணியிடத்தில் நீங்கள் முழு நம்பிக்கையுடன் முடிவுகளை எடுத்தால், உங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். காதல் உறவில், ஒரு தந்தை போன்ற பெரியவர் ஒருவரால் உங்களுக்குச் சிக்கல்கள் ஏற்படலாம்.

## கும்பம்

பணியிடத்தில் மற்றவர்களுடன் இணைந்து செய்யும் கூட்டு முயற்சிகள் உங்களுக்குச் சிறந்த வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதுடன், வெற்றிக்கும் வழிவகுக்கும். உங்கள் உடல்நிலையில் முன்னேற்றம் காணப்பட்டாலும், தசை வலி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இன்னும் இருக்கக்கூடும். வீட்டில் சூழ்நிலைகள் இயல்பாகவே இருக்கும். உங்கள் உள்ளுணர்வை நம்பி முடிவுகளை எடுப்பது உங்களுக்கு நன்மையாக அமையும். வீட்டில் உள்ள ஒரு இளம் நபருக்காக அதிக செலவுகள் செய்ய நேரிடும்.

## மிதுனம்

பணிச்சூழலில் முன்னேற்றம் காணப்படும். நிதி சார்ந்த விடயங்களில் சாதகமான சூழல்கள் உருவாகும். புதிய முதலீடும் நீண்டகால அடிப்படையில் சிறப்பான பலன்களைத் தரும். உடல்நலம் மேம்படும். இருப்பினும், ஏதேனும் ஒரு விடயத்தைப் பொறுத்தவரை உங்களுக்குச் சில ஐயங்கள் ஏற்படக்கூடும்.

இம்மாதம் நீங்கள் பயணம் செய்வதைத் தவிர்ப்பது சிறந்தது. காதல் உறவுகளில், ஒரு தாய்மைக் குணம் கொண்ட பெண்ணின் காரணமாக கருத்து வேறுபாடுகள் எழக்கூடும். மே மாத இறுதியில் உங்களுக்கு ஏதேனும் ஒரு நற்செய்தி வந்து சேரலாம்.

## கன்னி

காதல் உறவுகளில் இருவருக்கிடையேயான அன்பு அதிகரிக்கும் . குடும்பம் சார்ந்த விடயங்களில் நீங்கள் எடுக்கும் சில முடிவுகள் உங்களுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். பயணங்கள் மூலம் உங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்றாலும், அது உங்கள் எதிர்பார்ப்புகளை விடச் சற்று குறைவாகவே இருக்கும். குறிப்பாக, தந்தை ஸ்தானத்தில் உள்ள ஒருவருக்காக அதிக செலவுகள் செய்ய நேரிடும். மே மாத இறுதியில் உங்கள் வாழ்க்கையில் ஒரு சமநிலையைப் பேணி நடந்தால், நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

## தனுசு

பணியிடத்தில் நீங்கள் எவ்வளவு அதிக கவனத்துடனும் ஈடுபாட்டுடனும் பணியாற்றுகிறீர்களோ, அந்தளவுக்கு அதிக முன்னேற்றத்தையும் வெற்றியையும் அடைவீர்கள். இம்மாதம் நிதி சார்ந்த விடயங்களும் மேம்படும். உங்கள் உடல்நிலையும் கணிசமாக மேம்படும். பயணங்கள் உங்களுக்கு நல்ல செய்திகளைக் கொண்டுவரும். குடும்பத்தில் நல்ல செய்திகள் வந்து சேரும். காதல் உறவுகளில் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

## மீனம்

உங்களுக்கும் உங்கள் துணையுக்கும் இடையிலான பரஸ்பர அன்பு அதிகரிக்கும். பணியிடத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். இம்மாதத்தில் ஒரு முக்கியமான அல்லது சிறந்த திட்டத்தை நீங்கள் பெறும் வாய்ப்பும் உள்ளது. நிதி சார்ந்த விடயங்களில் இம்மாதத்தில் நீங்கள் மேற்கொள்ளும் கடின உழைப்பு எதுவாக இருந்தாலும், அதற்கான நற்பலன்களை எதிர்காலத்தில் நிச்சயம் அறுவடை செய்வீர்கள். பயணங்களின் மூலம் உங்களுக்குச் சாதாரண அளவிலான வெற்றிகள் கிட்டும். மே மாத இறுதியில், தேவையற்ற மோதல்கள் அல்லது சச்சரவுகளைத் தவிர்த்துவிடுவது உங்களுக்கு நன்மையாக அமையும்.

# கேள்விக்குறியாகும் சிறுவர் பாதுகாப்பு; தொடர்கதையாகும் பெண்மையின் துயரம்

● சியாமளா யோகேஸ்வரன்

ஆஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிமக்களின் வாழ்க்கை முறை, இயற்கை, குடும்பம் மற்றும் பாரம்பரியத்துடன் நெருங்கிப் பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுவதுடன், அவர்கள் சமூகமாக வாழும் முறையும் தனித்துவமானதாகவே காணப்படுகின்றது. பூர்விகக்குடிமக்கள் பெரும்பாலும் கூட்டுக்குடும்பங்களாக “community” அல்லது “town camps” எனப்படும் குழுவாகச் சேர்ந்து வாழும் குடியிருப்புகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஒரே வீட்டில் பலர் சேர்ந்து வாழ்வது சாதாரணமாக இருப்பதும், குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதைச் சமூகத்தின் பொறுப்பாகவே கருதிக் குழந்தைகளை வளர்ப்பதில் எல்லோருமே உரிமையுடன் பங்கெடுத்துக் கொள்வதும் பொதுவான அம்சங்களாக இருக்கின்றன.

இந்தப் பின்னணியைக் கொண்ட ஐந்து வயதான ஆஸ்திரேலிய பூர்வீகச் (Aboriginal) சிறுமி ஒருத்தி வடக்கு பிரதேசத்தில் உள்ள அலைஸ் ஸ்பிரிங்ஸ் (Alice Spring) நகர முகாம் ஒன்றிலிருந்து கடத்தப்பட்டுள்ளதாகத் தேடப்பட்டு வந்த நிலையில், அவளின் உடலானது ஐந்து நாட்களின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இச்சிறுமியின் மரணமானது, பூர்வகுடிச் சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றிய பல கேள்விகளையும் எழுப்பியிருக்கின்றது.

சிறுமியின் மரணத்தின் பின்னரான துக்ககாலத்தில் பயன்படுத்துவதற்காக, குமாஞ்சாயி என்ற மாற்றுப்பெயரை அவளுடைய குடும்பத்தினர் அச்சிறுமிக்கு வழங்கியிருக்கின்றனர். இது ஆஸ்திரேலியாவின் பூர்வீக வார்ல்பிரி மக்களிடையே காணப்படும் ஒரு பண்பாட்டு நடைமுறையாகும். இறந்து போன அன்புக்குரியவரின் பெயரைப் பயன்படுத்துவது, அவர்களின் ஆன்மாவை பாதிக்கக்கூடும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

குமாஞ்சாயி என்று அழைக்கப்படும் சிறுமி மத்திய ஆஸ்திரேலியாவில் அறியப்பட்ட பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளது கூட்டுக்குடும்பத்தில் ராபின் கிரானைட்ஸ் ஜபாங்கங்கா உள்ளிட்ட சமகால பூர்வீக ஆஸ்திரேலிய கலைஞர்கள், மேலும் அரசியல்வாதிகள் பெஸ் பிரைஸ் மற்றும் ஜசிந்தா நம்பிஜின்பா பிரைஸ் ஆகியோரும் அடங்குவர்.

அடிக்கடி இடம் மாறி வாழ்ந்த குமாஞ்சாயின் குடும்பம், இறுதியில் அலைஸ் ஸ்பிரிங்ஸின் தெற்கு புறநகரில் உள்ள “இலிபெரென்யே ஓல்ட் டைமர்ஸ்” எனப்படும் வீடமைப்பு நிலைமை மோசமாயிருந்த ஒரு முகாமிலேயே வாழ்ந்து வந்திருக்கின்றது. சிறுமியின் தந்தையார் சிறையில் இருக்கும் நிலையில், தாயாராலும் கூட்டுக் குடும்பத்தினராலுமே குமாஞ்சாயி வளர்க்கப்பட்டு வந்திருக்கின்றார்.

உறவினர்களின் கூற்றின்படி குமாஞ்சாயி பேச முடியாதவர் என்றும், பெரும்பாலும் கையசைவுகள் மூலமாகவே தொடர்பு கொள்வார் என்றும் கூறப்படுகின்றது. நள்ளிரவிற்குச் சற்று முன்னதாகக் குடியிருப்பு முகாமில் தூங்க வைக்கப்பட்ட குமாஞ்சாயி காணாமல் போய் விட்டதாக 2026 ஏப்ரல் 26 அன்று அதிகாலை 1:30 மணியளவில் புகார் அளிக்கப்பட்டிருக்கின்றது. ஏப்ரல் 25 இரவு 11 மணியளவில் அதே குடியிருப்பில் தங்கியிருந்த சிறுமியின் தூரத்து உறவினரும், அண்மையில் சிறையிலிருந்து விடுதலையாகியிருந்தவருமான ஜெஃபர்சன் லூயிஸின் கைகளைப் பிடித்தபடி குமாஞ்சாயியைக் கண்டதாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

ஆரம்பத்தில் இக்கடத்தலானது காணாமல் போன வழக்காகவே கருதப்பட்டு, 300 தன்னார்வலர்களை உள்ளடக்கிய விரிவான தேடுதல் நடவடிக்கையாக முடுக்கி விடப்பட்டிருந்தது. இதேவேளை, சிறுமியுடன் கடைசியாக காணப்பட்ட லூயிஸை கண்டும்பிடிக்கக் காவல்துறையும் தனது தேடுதல் வேட்டையைத் தொடங்கியிருந்தது. சுமார் 5 சதுர கிலோமீற்றர் பகுதி கால்நடையாகவும், 80 சதுர கிலோமீற்றர் பகுதியானது வாகனங்களினதும் விமானங்களினதும் உதவி கொண்டும் தேடப்பட்டது.

கடத்தப்பட்ட குமாஞ்சாயியைக் காட்டுப்பகுதியில் கைவிட்டுச் சென்றிருக்கலாம் என்று காவல்துறை ஆரம்பத்தில் சந்தேகித்தது. பின்னர் ரொட் (Todd) ஆற்றின் வறண்ட பகுதியில் லூயிஸின் சட்டை, ஒரு குழந்தையின் உள்ளாடை மற்றும் ஒரு போர்வை ஆகியவற்றைக் காவல்துறை ஏப்ரல் 26 அன்று கண்டு பிடித்தது. அந்த இடமானது குற்றபிரதேசமாக அறிவிக்கப்பட்டதுடன், லூயிஸைக் கைது செய்யவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மரபணுப் பரிசோதனையில், அந்த உள்ளாடையில் குமாஞ்சாயி மற்றும் லூயிஸ் இருவரின் DNA சுவடுகள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. 2026 ஏப்ரல் 30 அன்று, தேடுதல் குழுவினரால் குமாஞ்சாயியின் உடல் கண்டுபிடிக்கப்பட்டதாக காவல்துறை அறிவித்தது.



சிறுமி கொலை செய்யப்பட்ட விபரம் வெளி வந்த பின்னர், மற்றொரு நகர முகாமில் தங்கியிருந்த லூயிஸ் உள்ளூர் மக்களால் கடுமையாகத் தாக்கப்பட்டு மயக்க நிலைக்கு தள்ளப்பட்டிருந்த நிலையில் காவல்துறை மற்றும் அவசர மருத்துவப் பணியாளர்களால் மீட்கப்பட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து அலைஸ் ஸ்பிரிங்ஸ் அருகே கூடிய சுமார் 400 பூர்வீக மக்கள் பூர்வீக மரபுச் சட்டத்தின் கீழ் லூயிஸூக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். மருத்துவமனைக்கு வெளியே கூடியிருந்த சிலர் கையில் அகப்பட்ட பொருட்களை எறிந்து போராட்டம் நடத்தியதும், காவல்துறை கண்ணீர்ப்புகை பயன்படுத்தி அடக்கியதும் வீடியோக் காட்சிகளில் பதிவாகியிருக்கின்றது.

போராட்டக்காரர்கள் காவல்துறை வாகனங்களைத் தாக்கியதுடன், ஒரு வாகனம் தீ வைத்து எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வன்முறையால் சுமார் 200,000 டொலர் வரையில் இழப்பேற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இச்சிறுமியின் மரணத்தால் தூண்டப்பட்ட வன்முறை கலவரங்களில் இதுவரையில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ABC செய்தி நிறுவனம் தெரிவித்த செய்திகளின் படி, மருத்துவமனைக்கு வெளியே கூடியிருந்த சிலர், லூயிஸ் PAYBACK (பழிவாங்கும் தண்டனை) எதிர்கொள்ள வேண்டும் என்று குரல் எழுப்பியதுடன், அவரை காவல்துறை பாதுகாத்து வருகிறது என்றும் குற்றம்சாட்டினர்.

“PAYBACK” என்பது மத்திய ஆஸ்திரேலியாவில் உள்ள பூர்விகக்குடிகளின் மரபுச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பாரம்பரிய தண்டனையைக் குறிக்கும் சொல் ஆகும். இது பூர்வீகக் குடும்பங்கள் மற்றும் குழுக்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மூத்தவர்களால் அமுல்படுத்தப்படக்கூடிய நடைமுறைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை காலை லூயிஸூக்கு எதிரான குற்றச்சாட்டுகளை அறிவித்த வடக்கு பிரதேச காவல்துறை ஆணையர் மார்டின் டோல் இந்தக் கலவரங்களை அருவருப்பானவை என்றும் கண்டனத்துக்குரியவை என்றும் விவரித்திருந்தார்.

லூயிஸ் தன் காயங்களுக்குச் சிகிச்சை பெற்று கொண்டிருந்த அலைஸ் ஸ்பிரிங்ஸ் மருத்துவமனைக்கு வெளியே ஏற்பட்ட வன்முறைக் கலவரங்களின் காரணமாக, காவல்துறை அவரை 1,500 கி.மீ. வடக்கில் உள்ள டார்வின் நகரத்துக்கு மாற்றியது.

லூயிஸூக்கு எதிராகப் பல குற்றப் பதிவுகள் காணப்படுகின்றன. கடந்த பத்து ஆண்டுகளில் கடுமையான தாக்குதல் மற்றும் குடும்ப வன்முறை தொடர்பான குற்றங்களுக்காக பலமுறை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் எனினும், குழந்தைகள் மீதான குற்றங்கள் எதுவும் பதிவாகியிருக்கவில்லை. 2024 ஒக்டோபரில் பிறரைத் தாக்குதல், குடும்ப வன்முறை குற்றங்கள் மற்றும் பிணை நிபந்தனைகளை மீறுதல் ஆகியவற்றுக்காக 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, குமாஞ்சாயி கடத்தப்படுவதற்கு ஆறு நாட்களுக்கு முன்பே சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தார்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, லூயிஸை லாஜாமானு பகுதியில் உள்ள குடும்பத்தினருடன் சேருமாறு அறிவுறுத்தப்பட்ட போதிலும், சமூக உறுப்பினர்களின் எதிர்ப்புக் காரணமாக அது நிறைவேறவில்லை என்றும் அதன் பின்னரே குமாஞ்சாயி தங்கியிருந்த முகாமில் வாழ்ந்த கூட்டுக் குடும்பத்தினருடன் வந்து தங்கியிருந்தார் என்றும் கூறப்படுகிறது. சம்பவத்திற்கு முன்பான நாட்களில் அவர் வழக்கத்துக் மாறாக அமைதியாக இருந்ததுடன் சற்று விசித்திரமாக நடந்து கொண்டதாகவும், அதிகமாக மதுபானம் அருந்தியிருந்ததாகவும் முகாமில் வசிப்பவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

47 வயதான ஜெஃபர்சன் லூயிஸ் 2026 மே 5 அன்று டார்வின் உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜராகும் வரை காவலில் வைக்கப்பட்டார். அவரின் மீது கொலைக் குற்றச்சாட்டுடன், பாலியல் தாக்குதல் தொடர்பான இரண்டு குற்றச்சாட்டுகளும் மேலதிகமாகச் சுமத்தப்பட்டிருக்கின்றன.

வடக்குப் பிரதேசத்துக்கான குழந்தைகள் பாதுகாப்பு அமைச்சரான ரொபின் காஹில், கொலையான சிறுமியின் குடும்ப நல அறிவிப்புகளைக் கையாண்ட விதம் குறித்த விசாரணைகள் நிறைவேறும் வரையில் குழந்தைகள் மற்றும் குடும்பங்கள் திணைக்களத்தைச் சார்ந்த மூவர் பணியிலிருந்து விலக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார். அதற்கு முன்தினம் வெளியான தகவல்களில், குமாஞ்சாயி பேபி உட்பட்ட ஆறு குழந்தைகளின் பாதுகாப்புக் குறித்த கவலைகள் எழுப்பப்பட்டிருந்தாகச் சொல்லப்பட்ட போதிலும், அது உறுதிப்படுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டதா என்பது குறித்த தெளிவான தகவல்கள் ஏதுமில்லை. “களவாடப்பட்ட தலைமுறைகள்” (Stolen generation) என்ற வரலாற்றின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, பூர்வகுடிக் குடும்பங்களில் இருந்து குழந்தைகளை அகற்றுவதில் பணியாளர்கள் தயக்கத்துடன் இருந்திருக்கலாம் என்ற கவலையையும் காஹில் தெரிவித்திருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

தொடர்ந்து அடக்குமுறைகளுக்குள்ளான சமூகமொன்றில் சட்டமும் வாழ்க்கையின் விதிமுறைகளும் சிதைந்து போயிருப்பதையும், குடும்ப வன்முறைகள், குற்றங்கள் போன்றன மலிந்து போயிருக்கின்றன என்பதையும் இந்நிகழ்வு உறுதிப்படுத்துகின்றது. பூர்வகுடிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இன்னமும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த அவல நிகழ்வு மேலும் அழுத்தமாக வலியுறுத்துகின்றது. எல்லாவற்றையும் தாண்டி தன்னைப் பாதுகாக்கவோ அல்லது தன் வேதனையையோ வெளிப்படுத்த முடியாத அவல நிலையில் மடிந்து போன ஒரு ஐந்து வயதுச் சிறுமியின் முகம் நினைவில் இருந்து நீங்க நீண்ட காலம் எடுக்கப் போகின்றது என்பதே தற்போதைய உண்மையாகும்.

# ஆஸ்திரேலிய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றம்!

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் Farrer தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், பல தசாப்தங்களாக நிலவி வந்த கூட்டணி கட்சிகளின் ஆதிக்கத்தை முறியடித்து One Nation கட்சி ஒரு வரலாற்றுச் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

Farrer தொகுதியில் One Nation கட்சி சார்பில் களமிறங்கிய David Farley பெற்ற வெற்றி, அக்கட்சி நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் நேரடியாகப் பெறும் முதல் வெற்றியாகக் கருதப்படுகிறது.

Farrer தொகுதியில் லிபரல் கட்சியின் வாக்குகள் பெருமளவில் சரிந்ததையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இந்த அதிரடி மாற்றமானது ஆஸ்திரேலியாவின் வலதுசாரி அரசியலில் ஏற்பட்டுள்ள ஒரு பெரும் மாற்றத்தின் அறிகுறியாக அரசியல் ஆய்வாளர்களால் பார்க்கப்படுகிறது.

வரும் காலங்களில் மற்ற தொகுதிகளையும் கைப்பற்றும் நோக்கில் ஒன் நேஷன் கட்சி தனது தேர்தல் வியூகங்களை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.




Farrer தொகுதி இடைத்தேர்தலில் லிபரல் கட்சி அடைந்த தோல்வி மற்றும் ஒன் நேஷன் கட்சியின் வெற்றி குறித்து தனது கருத்துக்களை பிரதமர் அந்தோணி அல்பானீஸ் பகிர்ந்துள்ளார்.

லிபரல் கட்சியினர் தங்களது கொள்கைகளில் தெளிவின்றி செயல்படுவதால் வாக்காளர்கள் உண்மையான வலதுசாரி கட்சியைத் தேர்ந்தெடுத்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒன் நேஷன் கட்சியின் செல்வாக்கு நாடு முழுவதும் பரவாது என்று கருதும் அவர், அக்கட்சி தீர்வுகளை விட குறைகளை மட்டுமே முன்னிறுத்துவதாக கூறியுள்ளார்.

லிபரல் கட்சியின் தலைவராக பதவி வகித்த சூசன் லே தனது பதவியை அண்மையில் ராஜினாமா செய்தார். அரசியலில் இருந்தும் ஒதுங்கினார்.

இதனால் சூசன் லேயின் தொகுதியான இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. அத்தேர்தலில் பிரதான இரு தேசியக் கட்சிகளும் தோல்வி அடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

One Nation கட்சியானது கடுமையான குடியேற்றக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தும் கட்சியாகும். ஆஸ்திரேலியர்களுக்கே முன்னுரிமை மற்றும் முதலிடம் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கும் கட்சியாகும்.



# குடியேற்றக் கட்டுப்பாடு: லிபரல் கூட்டணியின் ப்ளான்!

ஆஸ்திரேலிய எதிர்க்கட்சித் தலைவர் அங்கஸ் டெய்லர், நாட்டில் நிலவும் வீட்டுவசதி நெருக்கடியைக் கட்டுப்படுத்த வெளிநாட்டு குடியேற்ற எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கத் திட்டமிட்டுள்ளார்.

மக்கள்தொகை வளர்ச்சிக்கு ஏற்பப் புதிய வீடுகள் கட்டப்படாததால், குடியேற்ற வரம்பை வீடுகளின் எண்ணிக்கையோடு இணைக்க எதிர்க்கட்சிக் கூட்டணி முன்மொழிந்துள்ளது.

ஆஸ்திரேலிய குடிமக்களுக்கு வீட்டு வசதி கிடைப்பதை உறுதி செய்வதற்காக புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை கட்டுப் படுத்தப்படும் என்று அங்கஸ் டெய்லர், தெரிவித்துள்ளார்.

“இந்த நாட்டில் கிடைக்கும் வீட்டு வசதிக்கு ஏற்ப குடியேற்ற எண்ணிக்கை வரம்பிடப்பட வேண்டும்,” என்று டெய்லர் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் தேர்ந்தெடுக் கப்பட்டதில் இருந்து, மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் குடியிருப்புகளின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில், சுமார் 4,00,000 வீடுகள் பற்றாக்குறை நிலவுவதாக எதிர்க்கட்சியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த செப்டம்பர் வரையிலான ஓராண்டு காலத்தில், ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகை 4,00,000 ஆக அதிகரித்துள்ளது. இதில் முக்கால்வாசி வளர்ச்சி வெளிநாட்டு குடியேற்றத்தால் ஏற்பட்டுள்ளது.

குடியேற்ற வரம்புகளை நிர்ணயிக்கும் போது, நாட்டின் தேவைக்கான திறன்மிக்க பணியாளர்களின் (Skilled Migrants) அவசியம் கருத்தில் கொள்ளப்படும் என்று கூட்டணி உறுப்பினர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

“வாழ்க்கைச் செலவு ஆஸ்திரேலியர்களை நசுக்கி வருகிறது, அதன் மையப்பகுதியில் வீட்டு வசதிப் பிரச்சினை உள்ளது,” என்று டெய்லர் குறிப்பிட்டார்.

தற்போதைய மத்திய அரசு, இந்த தசாப்தத்தின் இறுதிக்குள் 1.2 மில்லியன் வீடுகளைக் கட்ட இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால், இந்த இலக்கை எட்டுவது கடினம் என்று கட்டுமானத் துறை எச்சரித்துள்ளது.

நிதி அமைச்சர் ஜிம் சால்மர்ஸ் (Jim Chalmers) இது குறித்துக் கூறுகையில், “வீட்டு வசதி என்பது நமது பொருளாதாரத்தின் வரையறுக்கப்பட்ட சவால்களில் ஒன்றாகும். அதிக வீடுகளைக் கட்டுவதற்கும், மக்களுக்கு மலிவு விலையில் வீடுகள் கிடைப்பதற்கும் அதிக முயற்சிகள் தேவை என்பதை ஏற்றுக்கொள்கிறோம்,” என்றார்.

# பூர்வகுடி சிறார் பாதுகாப்பு தொடர்பில் மீளாய்வு

5 வயது பூர்வகுடி சிறுமி கடத்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து, Northern Territory ஆஸ்திரேலிய அரசாங்கம் சிறார் பாதுகாப்பு முறையை முழுமையாக மறுஆய்வு செய்யத் திட்டமிட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடந்து வரும் நிலையில், மூன்று ஊழியர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

சிறார் பாதுகாப்பு அமைப்பில் உள்ள சட்டங்கள், கலாசாரம் மற்றும் வளங்கள் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து சரிசெய்வதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

இதற்கிடையில், மறைந்த சிறுமியின் குடும்பத்தினர் உருக்கமான அறிக்கை ஒன்றை வெளியிட்டு, இந்தத் துயரமான சம்பவத்தைப் அரசியலாக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



வன்முறையைத் தவிர்த்து, சிறுமியின் நினைவை அமைதியான முறையில் கௌரவிக்குமாறு அவர்கள் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இச்சம்பவம் ஆஸ்திரேலியா முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

# ஒப்பந்தம் கைச்சாத்து!



மேற்காசியாவில் நிலவும் போர்ச் சூழலால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகளைச் சமாளிக்க ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையில் புதிய பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

குறித்த ஒப்பந்தத்தின் பிரகாரம் எரிசக்தி, உணவு பாதுகாப்பு மற்றும் முக்கியமான தாதுக்களின் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்த இரு நாடுகளின் தலைவர்களும் திட்டமிட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள ஜப்பான் பிரதமர் ஆஸி. பிரதமரைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இதனையடுத்தே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

குறிப்பாக, எரிபொருள் தட்டுப்பாட்டைத் தவிர்க்கவும், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இரு நாட்டுப் பிரதமர்களும் உறுதியளித்துள்ளனர்.




# உக்ரைனின் ட்ரோன் போரியல்:

# ரஷ்யாவை அச்சுறுத்தும் ‘குறைந்த விலை’ வானாயுதம்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

வானத்தை யார் ஆள்கிறார்கள்?” என்பது பழைய கேள்வி. “குறைந்த செலவில் யார் அதிக குழப்பத்தை உருவாக்குகிறார்கள்?” என்பதுதான் இன்றைய நவீன போரியலின் புதிய கேள்வி. இரண்டாம் உலகப் போரில் டாங்கிகள் வரலாற்றை மாற்றியமைத்தவை என்றால், 21-ஆம் நூற்றாண்டில் ‘ட்ரோன்கள்’ இராணுவ வரலாற்றின் புதிய போர்மொழியாக மாறியுள்ளன.

### சிவப்பு சதுக்கத்தில் படிந்த ட்ரோன் நிழல்

ஒவ்வொரு ஆண்டும் மே 9 அன்று மொஸ்கோவின் சிவப்பு சதுக்கத்தில் நடைபெறும் ‘வெற்றி தின அணிவகுப்பு’, ரஷ்யாவின் இராணுவ வலிமையை உலகிற்குப் பறைசாற்றும் மேடை. ஆனால், 2026-ஆம் ஆண்டின் அணிவகுப்பு வழக்கமான பிரமாண்டமின்றிச் சோபையிழந்து காணப் பட்டது. இதற்குக் காரணம் உக்ரைனின் ட்ரோன் தாக்குதல் குறித்த அச்சமே.

ரஷ்யாவின் எண்ணெய்க் கிடங்குகள், இராணுவ விமானத் தளங்கள், ஏன்... மொஸ்கோவின் இதயப் பகுதிகள் வரை உக்ரைனின் ட்ரோன்கள் ஊடுருவியுள்ளன. பாரிய இராணுவ பலம் மட்டுமே ஒரு நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்துவிடாது ட்ரோன் தொழில்நுட்பமும் அவசியம் என்பதை இப்போரின் தற்போதைய போக்கு உலகிற்கு உரக்கச் சொல்கிறது.

### போர்க்களத்தின் புதிய நாயகன்: FPV ட்ரோன்கள்

பாரம்பரியமாக ஏவுகணைகளும், அணு ஆயுதங்களுமே ஒரு நாட்டின் பலமாகக் கருதப்பட்டன. இன்று அந்த நிலையைச் சிறிய ட்ரோன்கள் தலைகீழாக மாற்றியுள்ளன. உக்ரைன் போரில் FPV (First Person View) ட்ரோன்கள் மிகவும் பிரபலம். மிகக் குறைந்த செலவில் தயாரிக்கப்படும் இவை, வெடிகுண்டுகளைச் சுமந்து சென்று எதிரியின் டாங்கிகளையும், இராணுவ வாகனங்களையும் துல்லியமாகத் தாக்குகின்றன.

அதேபோல், ‘கமிகாஸி’ (Kamikaze) எனப்படும் தற்கொலை ட்ரோன்கள் மற்றும் ‘லோய்டரிங்’ (Loitering) வகை ட்ரோன்கள் இலக்கைக் கண்டறியும் வரை வானில் வட்டமிட்டு, பின்னர் நேரடியாக இலக்கின் மீது மோதிப் பேரழிவை ஏற்படுத்துகின்றன. ஈரான் தயாரிப்பான ‘ஷாகிட்-136’ போன்ற ட்ரோன்களை ரஷ்யா பயன்படுத்த, உக்ரைன் தனது உள்நாட்டு மற்றும் மேற்கத்திய ட்ரோன்களின் உதவியுடன் பதிலடி கொடுக்கிறது.




### தொழில்நுட்பப் போர்

ட்ரோன் போர் என்பது வெறும் ஆயுதப் போர் மட்டுமல்ல அது ஒரு தொழில்நுட்பப் போராகவும் உருவெடுத்துள்ளது. ட்ரோன்களைச் செயலிழக்கச் செய்ய GPS Jamming மற்றும் Signal Spoofing போன்ற மின்னணுப் போர் முறைகளை இருதரப்பும் தீவிரமாகப் பயன்படுத்துகின்றன. ட்ரோன்களைத் திசைதிருப்ப அல்லது அவற்றின் கட்டுப்பாட்டைத் துண்டிக்க ‘ஜேமர்கள்’ (Jammers) போர்க்களத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

### தரை முதல் கடல் வரை...

ட்ரோன்களின் ஆதிக்கம் தரைப்பகுதியோடு மட்டும் நின்றுவிடவில்லை கடல் ட்ரோன்கள் (Sea Drones) மூலம் இருதரப்பு கடற்படைக் கப்பல்களுக்கும் பாரிய சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளன. இது கடற்படை பாதுகாப்பு உத்திகளையே மாற்றி எழுத வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

பழைய உலகப் போர் முறைகளும், புதிய தொழில்நுட்பப் போரும் நேருக்கு நேர் மோதும் புள்ளியில் இன்று உலகம் நிற்கிறது. மொஸ்கோவின் சிவப்பு சதுக்கத்தில் அணிவகுக்கும் டாங்கிகளுக்கு மேலே மிதக்கும் ட்ரோன்களின் நிழல், எதிர்காலப் போர்களின் முகத்தை அப்பட்டமாகக் காட்டுகிறது. மனிதர்கள் நேரடியாகக் களமிறங்காமல், இயந்திரங்கள் மூலம் தாக்குதல் நடத்தும் இந்த ‘வானாயுதப் புரட்சி’, உலக அரசியலின் புதிய மொழியாக உருவெடுத்துள்ளது என்பதில் ஐயமில்லை.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices
& Things
Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling? Sell Smart pay only 1% Commision.

**Selling your home is a big moment.**
That's why we focus on the most important things:
getting you the strongest result, with a smarter, fairer fee structure.

**With Sell Smart, you get:**

- Professional marketing
- Strategic buyer targeting
- Confident negotiation
- A premium, boutique experience

SELL SMART.
SAVE MORE.
ACHIEVE BETTER.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au

Level 10, 14 Mason St, Dandenong VIC 3175
havenhillrealestate.com.au

Terms and Conditions apply*


PARBOILED RICE
ATHAVAN
PRODUCTS
Jaffna
CURRY POWDER
PREMIUM
MOONG DAL
(Roasted)
Soya Meat
CHILLI POWDER
EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST
DELIVERY
THIS WAY UP
ஆதவன்
ATHAVAN
Cargo Service
Australia to
Sri Lanka
Sri Lanka to
Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஆதவன்
ATHAVAN
ஸ்ரீ
AYYAPPA
ATHAVAN